# இலக்கு

இதழ் 61

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஜனவரி 19, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## சிங்கள மயமாகும் முல்லைத்தீவு..!

கோ— ரூபகாந்

நேர்காணல்

## எமது கட்சி மட்டுமே சமஸ்டி தீர்வில் உறுதியாக உள்ளது



செல்வராஜா கஜேந்திரன்



## சென்னையில் ஓர் புத்தக திருவிழா


கல்யாணி

## தமிழர் மரபுரிமை மாதம் மனித உரிமைகளையும் நீதியையும் நிலைநாட்ட உதவட்டும்

பற்றிமாகரன்

## நான்காம் தொழில் புரட்சிக்காக நம்மை தயார் செய்வோம் !

விக்கிரமன்




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

## ஐ.நா தீர்மானம் உலக நாடுகளை ஏமாற்ற சிறீலங்கா திட்டம்?



எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சிறீலங்கா விவகாரங்கள் விவாதிக்கப்படுவதையோ அல்லது சிறீலங்கா மீது மேலதிக அழுத்தங்கள் பிரயோகிக்கப் படுவதையோ தடுக்கும் முயற்சிகளை சிறீலங்கா அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

இந்த வாரம் சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் மத்திய மற்றும் தென்னாசியப் பிராந்தியத்திற்கான செயலாளர் அலிஸ் வெல்ஸ் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானம் குறித்து பேசியது ஒருபுறம் இருக்க, பொதுநலவாய நாடுகளின் தென்னாசிய பிராந்திய பணிப்பாளர் கெரத் பெய்லி இந்த வாரம் சிறீலங்காவுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனாவைச் சந்தித்த அவர் ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு தொடர்பில் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தார். கெரத்துடன் சிறீலங்காவுக்கான பிரித்தானிய தூதுவர் சாரா கட்டனும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

ஆனால் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை சிறீலங்கா நாடாளுமன்றம் அங்கீகரிக்கவில்லை என அமெரிக்க மற்றும் பிரித்தானிய அதிகாரிகளுக்கு தெரிவித்த சிறீலங்கா அதிகாரிகள், தாம் தமிழ் மக்களுடன் நல்லிணக்கப்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் திருமதி பி. எம் சார்ள்ஸ் அவர்களை ஆளுநராக நியமித்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவரிடம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், வடமாகாணத்தில் பல இடங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும், வடமாகாண சபைக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் எனவும், அதன் காலதாமதத்திற்கு முன்னைய அரசே பொறுப்பு எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, ஐ.நா தீர்மானத்தை முற்றுமுழுதாக எதிர்க்காது, அதில் உள்ள சில சரத்துக்களை மாற்றும் முயற்சிகளை சிறீலங்கா அரசு மேற்கொண்டு வருவதாகவும், அதில் சிறீலங்கா படையினர் மீதான விசாரணைகளை நீக்கும் திட்டங்களும் உண்டு எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிறீலங்காவுக்கு அவசர பயணம்



இந்த வாரம் அமெரிக்கா, சீனா, ரஸ்யா, பிரித்தானியா ஆகிய நான்கு வல்லரசு நாடுகளின் முக்கிய அதிகாரிகள் சிறீலங்காவிற்கு ஒரே நாளில் பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து, இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் ஒரு நாள் பயணமாக அவசரமாக சிறீலங்காவுக்கு நேற்று (18) வந்துள்ளார்.

சிறீலங்காவின் அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சாவைச் சந்தித்த அவர், சிறீலங்காவுடன் பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்த இந்தியா விரும்புவதாக தெரிவித்துள்ளதுடன், 50 மில்லியன் டொலர்களை சிறீலங்காவின் படைத்துறை மற்றும் புலானாய்வுத்துறை மேம்பாட்டுக்கு வழங்கியுள்ளார்.

இந்துசமுத்திர கடற் பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்தும் இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கடந்த வாரம் இந்தியா சென்றிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் ராம் மாகாவ் இந்த வாரம் 14 ஆம் நாள் சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்டதுடன், சிறீலங்கா அரச தலைவர் மற்றும் பிரதமர் ஆகியோரையும் சந்தித்திருந்தார்.

## வல்வை பட்டத் திருவிழா
### வானை அலங்கரித்த பட்டங்கள்



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ். மாவட்டத்தின் வல்வெட்டித்துறையில் நடைபெறும் வருடாந்த பட்டத் திருவிழா பெருமளவான மக்களை கவர்ந்திருந்ததுடன், சமூக வலைத்தளங்களிலும் அதிகம் பகிரப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக இடம்பெற்று வரும் இந்த திருவிழாவில் பட்டம் விடும் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுவதுண்டு.

வல்வை விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் இடம் பெறும் இந்த திருவிழாவில் பல்வேறு வகையான வடிவமைப்புக்களைக் கொண்ட 48 பட்டங்கள் வானை அலங்கரித்திருந்தன.

காலாச்சார இசை குழு வடிவில் வடிவமைக்கப்பட்ட பட்டமே இந்த போட்டியில் வெற்றியீட்டியுள்ளது.



இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம். கே சிவாஜிலிங்கம், வடமாகாண போக்குவரத்துப் பிரிவு பணிப்பாளர் சுஜிவா சிவதாஸ், வடமாகாண இளையோர் மற்றும் விளையாட்டுத்துறை செயலாளர் எல். இளங்கோவன் மற்றும் வல்வை நகராட்சி சபை தலைவர் கே கருணராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## ஐ.தே.க இரண்டாக பிளவு புதிய கூட்டணி அமைக்க திட்டம்?

சிறீலங்காவின் மிகவும் பழமையான அரசியல் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கட்சி தலைமைப் பொறுப்பு தொடர்பில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாகவே கட்சி இரண்டாக உடைந்துள்ளது. சஜித் பிரேமதாசா தலைமையில் ஒரு குழுவினரும், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மற்றும் ஒரு குழுவினரும் பிரிந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை(16) இடம் பெற்ற நாடாளுமன்றக்குழு கூட்டத்தின் போது இரு தரப்பினரும் பலத்த வாக்கு வாதத்தில் ஈடுபட்டதுடன், தகாத வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் இருந்து வெளியேறிய சஜித் பிரேமதாசா தலைமையிலான குழுவினர் புதிய பரந்து பட்ட கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை(17) கொழும்பில் இடம்பெற் றுள்ளது.

## மிலேனியம் சலஞ் உடன்பாட்டை சிறீலங்கா ஏற்கவேண்டும் அமெரிக்கா காங்கிரஸ் சபை

மிலேனியம் சலஞ் உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அமெரிக்காவின் காங்கிரஸ் சபை உறுதியாக உள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளர்.

இந்த வாரம் சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் மத்திய மற்றும் தென்னாசியப் பிராந்தியத்திற்கான செயலாளர் அலிஸ் வெல்ஸ் இதனை உறுதிப்படுத்தியதுடன், அவரின் சிறீலங்கா பயணத்தின் நோக்கத்தை வெற்றிபெறச் செய்யும் வகையில் சிறீலங்காவுக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கும் சிறீலங்காவுக்கு கடந்த வாரம் வருகை தந்திருந்தார்.

சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்சா ஆகியோரை சந்தித்த பிளேக் அமெரிக்காவின் உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான அழுத்தங்களை மேற்கொண்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் உத்தரவிற்கு அமைவாகவே பிளேக் சிறீலங்காவுக்கு இரகசியமாக வந்திருந்தார்.

## மூன்று வல்லரசு நாடுகளின் இராஜதந்திரிகள் ஒன்றாக சிறீலங்காவில்

## சீனாவிடம் உதவிகோர சிறீலங்கா திட்டம்?



உலகின் மூன்று முக்கிய வல்லரசு நாடுகளின் இராஜதந்திரிகள் சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சாவை ஒரே நாளில் தனித்தனியாக சந்தித்தது சிறீலங்காவை மையம் கொண்டுள்ள பூகோள அரசியல் தொடர்பான கணிப்பை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை(14) அமெரிக்காவின் மத்திய மற்றும் தென் ஆசியப் பிராந்தியத்திற்கான செயலாளர் அலிஸ் வெல்ஸ், சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி மற்றும் ரஸ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லெவ்ரோவ் ஆகியோர் சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயாவை தனித்தனியாக ஒரே நாளில் சந்தித்திருந்தனர். இந்த சந்திப்பின் போது சிறீலங்காவின் பிரதமரும், கோத்தபாயாவின் சகோதரருமான மகிந்த ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகியோரும் உடன் இருந்தனர்.

பொருளாதார மற்றும் பாதுகாப்பு உடன்பாடுகள் குறித்தே இந்த மூன்று அதிகாரிகளும் பேசியுள்ளனர். அலிஸ் வெல் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எழுதிய கடிதத்தை கோத்தபாயாவிடம் கையளித்துள்ளார்.

சிறீலங்காவுடன் அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள உறவுகள் மற்றும் உதவிகள் தொடர்பான நிபந்தனைகள் அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி, பயங்கரவாத தடுப்பு ஒத்துழைப்பு, படைத்துறை உடன்பாடுகள், மிலேனியம் சலஞ் உடன்பாட்டு நிதி விவகாரம் போன்ற விடயங்கள் உள்ளடங்கியுள்ள கடிதத்தை கையளித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய அலிஸ் மிலேனியம் சலஞ் உடன்பாடு தொடர்பில் ஆய்வு செய்வதற்காக கோத்தபாயா அமைக்கும் குழுவை தாம் வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

எனினும், ஐக்கிய நாடுகள் சபை கொண்டு வந்த தீர்மானம் தொடர்பில் சிறீலங்கா அரசின் நடவடிக்கைகள் குறித்து விரிவான பேச்சுக்களை மேற் கொண்டுள்ளதாக சிறீலங்காவுக்கான பயணத்தை நிறைவு செய்து வெளியேறும் போது வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசுடன் மேற்கொள்ளப்படவுள்ள படைத்துறை மற்றும் பொருளாதார உடன்பாடுகள் குறித்து பேசவில்லை. அவை தொடர்பில் பொதுத் தேர்தல் நிறைவு பெற்றதும் கலந்துரையாடப்படும்.

சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்ததும், இந்த உடன்பாடுகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றம் தொடர்பில் ஆய்வு செய்வோம். படைத்துறை ஒப்பந்தம் 1995ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, 18 அமெரிக்க கடற்படைக் கப்பல்களின் பயணம் என்பதே அதன் வெற்றிதான்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கொண்டு வந்த தீர்மானம் தொடர்பில் விரிவான பேச்சுக்களை மேற்கொண்டிருந்தேன். காணிகள் விடுவிப்பு, காணாமல் போனவர்களுக்கான நீதி தொடர்பில் ஆராயப்பட்டது.

சிறீலங்கா எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேண வேண்டும். பல நாடுகளைப் போலவே சிறீலங்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாடுகளின் முதலீடுகள் தேவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அவர் பொது அமைப்புக்கள் மற்றும் தமிழத் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார்.

2015ஆம் ஆண்டு ஐ.நா தீர்மானத்தின் பின்னனியில் அமெரிக்கா இருந்த போதும் தற்போது அமெரிக்கா ஐ.நா மனித உரிமைகள் அமைப்பில் உறுப்பினராக இல்லை. ஆனால் சிறீலங்காவின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதை சீனா ஒருபோதும் அனுமதிக்காது என சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி தெரிவித்துள்ளார்.

கோத்தபாயாவுக்கு சீன அரசின் வாழ்த்துக்களைத் தெரித்த அவர், சிறீலங்காவின் பொருளாதார அபிவிருத்தி, தொழில் நுட்பம் ஆகியவற்றை மேம்படுத்த சீனா உதவும் என்பதுடன், சிறீலங்காவின் ஒருமைப்பாட்டையும், சுதந்திரத்தையும் சீனா காப்பாற்றும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமக்கு சீனாவிடம் இருந்து அதிக பொருளாதார உதவி தேவை என மகிந்தா சீன அமைச்சரிடம் கேட்டதுடன், பொருளாதார உதவிகளை வழங்கும் வல்லமை சீனாவுக்கே உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவுடன் பொருளாதார உறவுகளை பலப்படுத்த விரும்புவதாக தெரிவித்துள்ள ரஸ்யாவின் அமைச்சர், ஐக்கிய நாடுகள் சபையில் சிறீலங்கா தமக்கு ஆதரவு அளித்ததற்கு நன்றியையும் தெரிவித்துள்ளார். மேலும் சிறீலங்காவுக்கு தொடர்ந்து ஆயுதங்களை விநியோகம் செய்யவும் ரஸ்யா விரும்புவதாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயற்பட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, பிரேசில், தென்னாபிரிக்கா மற்றும் ரஸ்யாவைக் கொண்ட பி.ஆர்.ஐ.சி.எஸ் எனப்படும் ஐந்து முக்கிய பொருளாதார நாடுகளின் கூட்டணியில் ரஸ்யா முக்கிய பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது.

**தொடர்ச்சி 13ம் பக்கம்**

ஆசிரியர் தலையங்கம்

## இலக்கு — தை பிறந்து விட்டது வழி பிறக்குமா?

**தை பிறந்து விட்டது. புதிய ஓராண்டு காலத்துள் ஈழத்தமிழினம் அடியெடுத்து வைத்துள்ளது. பொங்கலோ பொங்கல் என ஆர்ப்பரித்து, எத்தனையோ துன்பங்களுக்கு மத்தியிலும் புதிய காலத்துள் தை பிறந்தால் வழி பிறக்கும் என்னும் நம்பிக்கையுடன் ஈழத்தமிழ் மக்கள் வாழப் புறப்பட்டு விட்டனர்.**

**“முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும் - மூண்டிருக்கும் இந்நாள் நிகழ்ச்சியும் – நாளை நாடுறு பெற்றியும் - தேர்கிலார் பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்” என்ற பாரதி காலத்து கவித்துவப் பிரகடனத்தில் பெரிதான மாற்றம் ஏதும் இல்லாத நிலையில் தமிழர்களின் கல்வி தொடர்கிறது. இந்தப் போக்கே எத்தனை தை பிறந்தாலும் வழி பிறக்காத இனமாக ஈழத்தமிழினத்தை மாற்றி விடுகிறது.**

**ஈழத்தமிழனின் சிந்தனையை சாதி மத பிரதேச உணர்வுகளால் திசை திருப்பும் அவனுடைய வாழ்க்கை முறைகளில் இருந்து அவன் விடுபடுவதாக இல்லை. நாளாந்த பொது வாழ்வில் அறிவியல் அணுகு முறையுடன் சமய இலக்கிய வரலாற்று மீள்பார்வைகளை தொடங்கி தொன்மையின் உண்மைகளைத் தொடர்ச்சியில் காணும் தன்மையை உருவாக்கினாலே அடிமைச் சிந்தனையில் இருந்து ஈழத்தமிழினம் விடுபடும். இது மனித உரிமைப் பேணலுக்கான அடித்தளமாகவும் உள்ளது. சிந்தனைத் தெளிவுள்ள மனிதனால்தான் தான் சுதந்திரமானவன் என்ற உறுதியுடன் எந்த அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிராகச் செயற்பட முடியும்.**

**மேலும் தமிழர்களுடைய தாயகத்தில் தமிழர்களாகிய அவர்களின் மக்கள் தொகையைக் குறைப்பதன் வழி தங்களுடைய பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரத்தைச் சிங்கள பௌத்த மேலாண்மைக்குள் வளர்த்தெடுத்து இனத்துவச் சிறு பான்மையினர்களால் எதுவுமே செய்ய முடியாத சட்டங்களைக் கொண்டு வருவது என்பது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் 1948 முதலான தொடர் அரசியல் செயற்திட்டம். இதில் தொடர்ந்து வெற்றி பெற்று வரும் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையை ஈட்டிட வைக்கும் முயற்சிகளில் இன்றைய அரசு மிக வேகமாக ஏப்ரல் வரை செயற்படும் காலமாகத் தமிழர்களின் இப் புத்தாண்டின் முதல் நான்கு மாதங்கள் தொடரப் போகின்றது.**

**இந்நேரத்தில் தமிழர்கள் தங்கள் சனநாயகமாம் வாக்குப் பலத்தை உறுதிப்படுத்தும் பொது வேலைத் திட்டம் ஒன்று கண்டறியப்பட்டு செயற்பட்டாலே ஈழத்தமிழர்களின் மிகமிக மெலிதான சனநாயகக் குரலையாவது தக்க வைத்துக் கொள்ளலாம். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஒருங்கிணைப்பு ஒன்று, சனநாயக ரீதியாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வாக்குப் பலத்தை ஒருங்கிணைக்கவும் ஒருமைப்படுத்தவும் உடன் தேவையாகிறது.**

**அதேவேளை இலங்கைத் தமிழ் மக்களுக்கு புலம்பெயர் தமிழர்களின் உதவியின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர வேண்டும். உலகத் தமிழர்களாக அவரவர் வாழும் நாடுகளின் குடியுரிமையுள்ள அந்தந்த நாட்டின் இனத்துவச் சிறுபான்மையினராக அரசியல் பலம் பெற்றுள்ள புலம்பெயர் தமிழர்களும், தங்களின் நிதி வளமும் மதி வளமும் ஈழத் தமிழர்களுக்கான வறுமையை நீக்கும் சமுக மூலதனமாகவும் அவர்களின் அறியாமைகளை நீக்கும் செயற் திட்டங்களாகவும், சனநாயக வழிகளில் அவர்களின் மனித உரிமைகளையும் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளையும் வென்றெடுக்கும் சக்தியளித்தலாக மாற்றிட உறுதி பூணுதல் வேண்டும். இதற்கு உலகத் தமிழர்களாகத் திகழும் புலம்பெயர் தமிழர்கள் தங்களிடையே உள்ள “மாறுபாடுகளின் வேறுபாடுகளின் உண்மைத் தன்மைகளை ஏற்று மதித்த நிலையில்” பொது வேலைத் திட்டங்கள் மூலம் ஒன்றிணைந்து செயற்படல் மிகமிக அவசியமாகிறது.**

**இவற்றையெல்லாம் தனி மனித நிலையிலும் பொது மனித நிலையிலும் எந்த அளவுக்கு விரைவாகவும் உறுதியாகவும் தமிழினம் வடிவமைத்துக் கொள்கிறதோ அந்த அளவுக்குப் பிறந்ததை நிச்சயமாக பாதுகாப்பான அமைதியான வாழ்வுக்கு வழிகாட்டும்.**

**- ஆசிரியர்**




# சிங்கள மயமாகும் முல்லைத்தீவு..!

கோ- ரூபகாந்

**மு**ல்லைத்தீவு மாவட்டத்தில் சத்தம் இன்றிப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சிங்கள மயமாக்கப்பட்ட வண்ணமேயுள்ளன. இவற்றைக் கேட்கவேண்டிய அதிகாரிகள் எட்டியும் பார்ப்பதில்லை. தடுக்க வேண்டிய அரசியல்வாதிகள் உருப்படியாக ஏதும் நிறை வேற்றுவதில்லை எனச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இவ்வாறு 127 கிராம சேவகர்கள் பிரிவினையும், 115,024 மக்களையும் உள்ளடக்கிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டமானது 2614 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இம் மாவட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியை நிலங்களைச் சிங்களம் விழுங்கி விட்டது.



இம் மாவட்டத்தின் தென்பகுதியில் இருந்து தமிழ்மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வளம் மிக்க பகுதிகளெனச் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் 1980ஆம் ஆண்டிற்கு முன்பு அபகரிக்கப்பட்டு 6 கிராமசேவகர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு இம் மாவட்டத்தின் ஆறாவது பிரதேச செயலாளர் பிரிவாக நிர்வகிக்கப்படுகின்றது. ஆறாவதாக உருவாக்கப்பட்ட இந்தப் பிரதேச செயலகமானது முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் சுற்றுநிருபம் மட்டுமே உள்ளபோதும் இப் பிரதேச செயலாளர் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் இயங்குமென எந்தவித வர்த்த மானி அறிவித்தலும் வெளியாகவில்லை.

இவ்வாறு உருவாக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற சிங்களப் பிரதேச செயலாளர் பிரி வில் இன்று 9 ஆயிரத்து 560 சிங்கள மக்கள் வாழ்கி ன்றனர். இவர்களின் வாழ்வாதாரத்திற்கான தொழில் வாய்ப்புக்களுக்காகத் தமிழ் மக்களின் 6 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அபகரிக்கப்பட்டு மூவாயிரம் ஏக்கர் வீதம் பிரிக்கப்பட்டு டொலர் பாம், கென்பாம் என்ற மிகப்பெரும் இரு பண்ணை கள் உருவாக்கப்பட்டு இவர்களுக்கான தொழில் மையங்களும் அமைக்கப்பட்டன.

ஆனால் இன்று இப்பிரதேசங்கள் மிகவும் வளர்ச்சி கண்டு உட்கட்டுமான வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுப் பாட சாலைகள் முதல் சந்தை வாய்ப்புக்கள் வரையும் முல்லைத்தீவு நகரத்தினையும் மிஞ்சி நிற்கின்றது.

இதன் பின்பு இறுதி யுத்த காலத்திலும் இதனைஅண்டியபகுதிகள்மற்றும்ஒதியமலையை அண்மித்த பகுதிகள் உள்ளடங்கலாக மேலும் 3 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் வாழ்விடங்களும் வாழ்வாதார நிலங்களும் அபகரிக்கப்பட்டுள்ளதுடன் வனப்பகுதிகளாக இருந்த இம் மாவட்டத்தின் எல்லைப்புறங்களும் அளவு கணக்குத் தெரியா மாலேயே அபகரிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுமாவட்டத்தில்டொலர்பாம், கென்பாம் எனவும் வெலிஓயா எனவும் ஒரு பெரும்பகுதியை ஏப்பம் விட்ட சிங்களப் பூதம் தற்போது கொக்குளாய், கொக்குத்தொடுவாயில் ஒருபகுதி நிலமும், இங்கே செல்லும் வீதி யோரமுள்ள காடுகளைப் பார்வைக்கு விட்டபின்பு சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் புற்றுநோய் உள்ளிருந்தே கொல்வதைப்போல் பாரிய குடியி ருப்புக்களையும் அமைத்துள்ளனர்.

இதேபோன்று அம்பகாமம், இரணைமடு பகுதி களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகளையும், வயல்களையும் ஆக்கிரமித்துள்ள இராணுவம் குளங்களைக்கூட விட்டு வைக்கவில்லை. இரணைமடு அம்பகாமம் பகுதிகளில் மட்டும் நான்கு குளங்கள் இன்றுவரை படையினரின் முற்றுகைக்குள் உள்ளன. இவ்விடத்தில் மட் டும் 8 ஆயிரம் ஏக்கர் நிலம் படையினரின் கட்டுப் பாட்டில் உள்ளது.

இப்பகுதியில் அம்பகாமம், புலிமச்சிநாத குளம், கூழாமுறிப்பு போன்ற பகுதிகளை உள்ளடக்கிய வகையிலேயே குறித்த பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதில் மக்களின் வாழ்வாதாரமான வயல் நிலம் பல ஆயிரம் ஏக்கர் உண்டு. இவ் வயல்களையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்த சுமார் 1500 குடும்பங்கள் இன்றுவரை அடுத்தவர் தயவை நம்பி வாழும் நிலையில் உள்ளனர்.

இவற்றினை விடவும் விசுவமடு,



தர்மபுரம், கேப்பாபுலவு, கோம்பாவில், வட்டுவாகல் உள்ளிட்ட இடங்களில் பாரிய பிரதேசங்களும் ஏனைய இடங்கள் பலவற்றில் சிறு சிறு துண்டுகளாகவென மொத்தம் 40 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தைச் சிங்களப் படைகள் ஆக்கிரமித்து முழுமையாக சுருட்டி வைத்துள்ளனர். இவற்றிற்கு அப்பால். மகாவலி L வலயம் என இன்னொரு பகுதியும் பறிபோன வண்ணமே உள்ளது.

இவை அனைத்தையும் போன்று A 9 வீதியில் இரணைமடுச் சந்திக்கு அப்பால் முல்லைமாவட்டம் ஆரம்பிக்கும் பிரதேசத்தில் இருந்து கொக்காவில் பிரதேசமான சுமார் 7 கிலோமீற்றர் தொலைவு கொண்ட பகுதியில் வீதியின் முகப்பில் காடு அப்படியே காட்சி யளிக்கப் புற்றுநோய் இங்கேயும் ஆக்கிரமித்து விட்டது. நீளம் ஏழு கிலோமீற்றர் எனின் அகலம் எத்தனை கிலோமீற்றர் என்பதனை வரையறுத்துக்கூற முடியாதவாறு காடு முழுமையாக இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டதுடன் முறிகண்டி, வசந்தநகர்ப் பகுதிகளில்வாழ்ந்ததமிழ்மக்களும்படையினரால் விரட்டப்பட்டு அப்பகுதிகளும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இங்கு மொத்தம் 4000 ஏக்கர் நிலம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன் முறிகண்டிக் குளமும் இன்றுவரை படையினரின் ஆக்கிரமிப்பிலேயே உள்ளது.



இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ் மக்கள் 2002ஆம் ஆண்டு சமாதான கால த்திலேயே புதிதாக வீடுகள் அமைத்து மீளக் குடியமர்ந்திருந்தார்கள். இவ்வாறு புதிதாக வீடு களை அமைத்தவர்களில் சுமார் 150இற்கும் மேற்பட்ட வீடுகள் தற்போது படையினரின் பிடியில் உள்ளதால் இதன் உரிமையாளர்கள் சிதறுண்டுபோய் உள்ளனர். இவர்களுடைய பல காணிகளின் அனுமதிப் பத்திரங்கள் மட்டுமே உரிமையாளர்களின் கைவசம் உள்ளன. இதில் பல காணிகளைச் சுற்றி முட்கம்பிகள் அமைத்திருந்தாலும் சில இடங்களைச் சூனியப் பிரதேசம் போலக் கைவிட்டுள்ள படையினர் அதன் உரிமையாளர்களை மட்டும் வாழ்விடம் அமைக்க அனுமதிக்கவில்லை.

இவ்வாறு A 9 வீதியில். முறிகண்டிக் காட்டினை அண்டிய பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை அபகரித்துள்ள படையினரின் பயன்பாட்டிற்கென காட்டின் நடுவே நூற்றிற்கும் மேற்பட்ட முகாம்கள் சீனாவின் பொருத்து வீட்டுப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளதோடு பல தார் வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன் சகல விதமான வசதி வாய்ப்புக்களும் நடுக்காட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளுக்குள் ஒருபகுதி சிங்கள மக்களும் அடிக்கடி வந்து செல்கின்றனர். இதனால் இங்குசிங்களக்குடும்பங்களும்வந்துவிட்டனவா? என்ற பெரும் அச்சம் எழுந்துள்ளது. இவ்வாறான அச்சம் பெரும் முன் எச்சரிக்கையாகவும் உள்ளது. நடுக்காட்டில் போதிய வசதி வாய்ப்பை உண்டுபண்ணியுள்ளோர் பிரதான வீதிகளில் இருந்து இறங்கும் வீதிகளை மட்டும் கிரவல் கொண்டே அமைத்துள்ளனர்.

இவ்வாறு செல்லும் குறுக்கு வீதியில் ஒரு குறுக்கு வீதியானது முறிகண்டிக் குளத்தின் ஊடாகச் செல்வதனால் அக்குளத்தின் நீர் சற்றேனும் தேங்கிவிடக் கூடாது என்பதற்காகவே குளக்கட்டினை நடுவில் உடைத்து வெள்ள நீரைத் தமிழர்கள் குடியிருப்புக்குள் செலுத்தியுள்ளது இராணுவம்.

இவ்வாறாகச் சிங்களமயமாக்கப்பட்ட

தொடர்ச்சி 13ம் பக்கம்

கட்டுரை

# தமிழ்க் கட்சிகள்





# பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன?

கொழும்பிலிருந்து ஆதவன்

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளால் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கும் பின்னணியில் பொதுத் தேர்தலுக்கான களம் திறக்கப்பட்டு இருக்கின்றது. பாராளுமன்றம் பெரும்பாலும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் கலைக்கப்படலாம் எனவும் ஏப்ரல் மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்பார்ப்புடன் பிரதான சிங்களக் கட்சிகள் மட்டுமன்றி தமிழ் கட்சிகளும் தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கு முற்படுகின்றன.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த முறை நெருக்கடிகள் அதிகமாக இருந்தாலும் கூட ஒற்றுமையாக களம் இறங்க கூடிய ஒரு சூழ்நிலையை காண முடியவில்லை. இதனால் வாக்குகள் சிதறுவதற்கும் பேரம் பேசும் பலம் குறைவதற்கும் வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

மாற்று அணி என்ற பெயரில் விக்கினேஸ்வரன் தலைமையில் உருவாக்கிய தமிழ் மக்கள் கூட்டணி நடைபெறப்போகும் தேர்தலில் முதல் தடவையாக களத்தில் குதிக்க போகின்றது. தனியாகவா அல்லது கூட்டணியாகக் களமிறங்கப்போகின்றார்களா என்பது இன்று வரை தெரியவில்லை. இது அவர்களுக்கு முதலாவது பலப் பரீட்சை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழ் தேசிய அரசியலில் முதன்மை இடத்தை பிடித்திருந்தது. அதனை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் விக்னேஸ்வரனின் மாற்றுத் தலைமை உருவாகுமா என்ற கேள்விக்கு நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் பதிலை தரப்போகிறது.

### கூட்டமைப்பின் பின்னடைவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அவர்களுக்கும் வரப்போகும் பொதுத்தேர்தல் நெருக்கடி மிக்க ஒன்றாகவே அமையப் போன்றது. காரணம் கூட்டமைப்பில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இணைந்து போட்டியிட்ட ஈபிஆர்எல்எப் அதிலிருந்து வெளியேறியிருக்கின்றது. வடமாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சராக நிறுத்தப்பட்டிருந்த சி.வி.விக்னேஸ்வரன் தனியாக களமிறங்குகிறார். ரெலோவில் இருந்து பிரிந்து சென்ற அணியினரும் விக்னேஸ்வரன் அணியுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். இதுபோன்ற காரணங்களால் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நடைபெறப்போகும் தேர்தலில் சவால் ஒன்றை எதிர்கொள்ளப் போன்றது.



கடந்த 5 வருடங்களாக தொடர்ந்த மைத்திரி-ரணில் ஆட்சிக்காலத்தில் கூட்டமைப்பின் செல்வாக்கு பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்தது. இந்தக் காலகட்டத்தில்தான் ஈபிஆர்எல்எஃப் அமைப்பும் விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினரும் தனியாக பிரிந்து சென்றார்கள். அவர்கள் தனியாகப் பிரிந்து செல்வதற்கு கூட்டமைப்பு அரசாங்கத்துடன் நடத்திய இணக்க அரசியலும் ஒரு காரணம். அந்த இணக்க அரசியலுக்கு விக்னேஸ்வரனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் தடையாக இருந்ததால் அவர்களை கூட்டமைப்பின் தலைமை ஓரங்கட்ட முற்பட்டது. அவர்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனியாகச் சென்றார்கள்.



இணக்க அரசியலின் மூலமாக கூட்டத்தினால் எதனையுமே பெற்றுக்கொடுக்க முடியவில்லை என்பதுதான் அவர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு. அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் கூட்டமைப்பின் தலைமை, குறிப்பாக சம்பந்தனும் சுமந்திரனும் பெருமளவுக்கு நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த நம்பிக்கையின் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக பல்வேறு அரசியல் நகர்வுகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அந்த நகர்வின் மூலமாக ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்கப்பட்ட அளவுகூட தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பதுதான் கூட்டமைப்பினர் மீது முன்வைக்கப்படும் பிரதான குற்றச்சாட்டு.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையில் தம்முடைய முழு முதலீடுகளையும் அதிலேயே கூட்டமைப்புத் தலைமை செலுத்தி இருந்தது. ஆனால் அது சாத்தியமாகாது என்பதை ஓரளவுக்கு தெரிந்த நிலைமையில்தான் கம்பெரலிய போன்ற அபிவிருத்தி அரசியலில் கூட்டமைப்பு கவனம் திரும்பியிருந்தது. ஆனால் இந்த இரண்டின் மூலமாகவும் தமிழ் மக்களுடைய நம்பிக்கையையும் ஆதரவையும் கூட்டமைப்பினரால் தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை. இந்தப் பின்னணியில்தான் மாற்றுத் தலைமையின் முக்கியத்துவம் பெரிதாக உணரப்பட்டது.

### மாற்றுத் தலைமை

2009ற்கு முன்னர் கூட்டமைப்பைக் கட்டுப்படுத்தும் வல்லமை விடுதலைப்புலிகளின் கைகளில் இருந்தது. வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில்கூட அவர்களுடைய செல்வாக்கு இருந்தது. 2010இல் தமிழரசுக் கட்சியின் கரங்கள் மேலோங்க, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணி அதிலிருந்து ஓரங்கட்டப்பட்டது. கூட்டமைப்புக்கு மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்க முற்பட்ட கஜேந்திரகுமார் 2010, 2015 தேர்தல்களில் தோல்வியடைய மாற்றுத் தலைமையை உருவாக்கும் அவரது கனவும் கலைந்தது.

அதேவேளையில், கூட்டமைப்பினரால் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்ட சி.வி.விக்கினேஸ்வரன் கூட்டமைப்புத் தலைமையுடன் முரண்பட ஆரம்பித்த போதே மாற்றுத் தலைமைக்குப் பொருத்தமான ஆளுமையைக் கொண்ட ஒருவராக அவர் இனங்காணப்பட்டார். மாகாண சபையில் அவர் கொண்டுவந்த தீர்மானங்கள், சர்வதேச ரீதியாவும், உள்நாட்டிலும் குறுகிய காலத்தில் அவர் பெற்றுக்கொண்ட முக்கியத்துவம் என்பன அவரை அந்த இடத்துக்கு உயர்த்தியது.

ஒரு அழுத்தக் குழுவாக அல்லது சிவில் அமைப்பாக அவர் உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவையும் குறுகிய காலத்துக்குள் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தைப் பெற்றது. அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் இதில் இணைந்து கொண்டன. தமிழரசுக் கட்சி, ரெலோ என்பவனவற்றைத் தவிர ஏனைய பிரதான தமிழ்க் கட்சிகள் பொதுவான கொள்கையின் அடிப்படையில் இதில் இணைந்து கொண்டதானது இதனைப் பலப்படுத்தியது. புதிய அரசியல் கட்சி ஒன்றை அவர் ஆரம்பிப்பதற்கும் இதுவே அடித்தளமாக இருந்தது.

சுரேஷ், கஜன், அனந்தி என அனைத்துத் தரப்பினரும் அவரை ஆதரிப்பதற்கும் தயாராக இருந்தமை மாற்றுத் தலைமைக்குப் பொருத்தமான ஒருவராக அவரை

தொடர்ச்சி 13ம் பக்கம்

# எமது கட்சி மட்டுமே சமஸ்டி தீர்வில் உறுதியாக உள்ளது



**செல்வராஜா கஜேந்திரன்**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் திரு செல்வராஜா கஜேந்திரன் அவர்கள் எதிர்வரும் தேர்தலில் போட்டி யிடுவது தொடர்பாகவும், தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.**

**கேள்வி:**

**இந்தக் காலகட்டத்தில் உங்கள் கட் சியின் வளர்ச்சி பற்றி கூறவும்?**

**பதில்:**

கடந்த 2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சி உருவாக்கப்பட்டது. அதற்கான பிரதான காரணம், தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 1976ஆம் ஆண்டு இடம்பெற்ற போது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வாக வடகிழக்கு இணைந்த தாயகம், தேசியம், சுயநிர்ணயம், தமிழ் தேசம், அதனுடைய இறைமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு சமஸ்டித் தீர்வை ஏற்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றபபட்டது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த தீர்மானத்தை 2009ஆம் ஆண்டு யூன் மாத்திற்கு பிற்பாடு கைவிட்ட நிலையில், அந்தக் கொள்கைகளை கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக எமது கட்சி உருவாக்கப்பட்டது.

ஆனால் எமது கட்சியை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதற்காக இலங்கை அரசாங்கமும், ஏனைய தமிழர் தரப்பு கட்சிகளும், ஒருசில ஊடகங்களும், சில சர்வதேச சக்திகளும் முன்னின்று எங்களைப் பற்றிய உண்மைகளை மறைத்து அப்பட்டமான பொய்களைப் பரப்பி எங்களை அழிப்பதற்கு முயற்சி செய்திருந்தார்கள். அதன் காரணமாக நாங்கள் 2010, 2015ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்தில் ஆசனங்களைப் பெறமுடியாதிருந்தது. இருந்தும் எங்களின் பயணமானது ஒரு பதவியைப் பெறுவதற்கான பயணமாக இல்லாது, அரசியல் விடுதலையை நோக்கிய பயணமாக இருந்ததால், நாங்கள் அந்தத் தோல்வியைத் தாண்டியும் எமது மக்களின் அரசியல் விடுதலைக்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் தலைமையிலே தெடர்ந்தும் பயணித்துக் கொண்டிருந்தோம். தேர்தல் தோல்விகளைப் பொருட்படுத்தாது பயணிப்பதற்கு , அரசியலை நாங்கள் முன்கொண்டு செல்வதற்கு கஜேந்திரகுமார் அவர்களின் ஊக்கமும் வழிகாட்டலும் மிகப் பெரிதாக இருந்தது.

அந்தப் பயணத்திலே 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலிலே கணிசமானளவு முன்னேற்றத்தையும் எழுச்சியையும் நாம் கண்டிருந்தோம். குறிப்பாக வடக்கு கிழக்கு, தமிழர் தாயகப் பிரதேசத்தில் நாங்கள் தமிழ்த் தேசியத்தில் முதலாவதாகவும், தேர்தலில் வாக்குகளைப் பெற்ற இரண்டாவது பெரிய கட்சியாகவும் இருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு மிகப் பெரிய வளர்ச்சி. இப்போது முன்பிருந்ததைவிட மக்களின் ஆதரவு எமக்கு மிகப் பெருமளவில் அதிகரித்திருக்கின்றது. எதிர்வரும் தேர்தலிலே அந்த மாற்றங்களை மக்கள் வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

**கேள்வி:**

**எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது உங்கள் கட்சியின் நிலைப்பாடு எப்படியிருக்கும்?**

**பதில்:**

எங்களுக்கு என்றொரு இலட்சியம் இருக்கின்றது. அந்த இலட்சி யத்தை அடையும் வரை அதற்கான பாதையில் நாங்கள் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றோம். அந்த பாதையில் தேர்தல்கள் வருகின்ற போது தவிர்க்க முடியாமல் நாங்களும் அந்த தேர்தல்களில் போட்டியிட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அந்த வகையில் வரப்போகும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடும்.

**கேள்வி:**

**தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் சேர வேண்டும் என்ற விவாதம் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இது தொடர்பாக உங்களின் கருத்து என்ன?**

**பதில்:**

என்னைப் பொறுத்த வரையில் இந்த விவாதங்களுக்கு நாங்கள்கடந்தகாலங்களில்பதிலளித்து முடித்து விட்டோம். எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் அரசியல் விடுதலை ஒன்றே எங்களின் குறிக்கோள். அந்த அரசியல் விடுதலை என்பது ஒற்றையாட்சி அரசியலமைப்பு நிராகரிக்கப்பட்டு, தமிழ்த் தேசத்தினுடைய அங்கீகாரத்தை வலியுறுத்தி அந்த அங்கீகாரம் பெறப்படுவதிலே தான் அரசியல் விடுதலை என்பது இருக்கின்றது. அந்த வகையிலே கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட ஒற்றையாட்சிக்கான இடைக் கால அறிக்கையை நிராகரித்து அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் சமஸ்டித் தீர்வு வேண்டும் என்ற தீர்வில் உறுதியாக இருக்கின்ற ஒரேயொரு அரசியல் கட்சியாக எமது கட்சியே இருக்கின்றது. ஆகவே இந்த நிலைப்பாட்டோடு நாங்கள் தொடர்ந்து பயணிப்போம். ஏனைய தரப்புகளைப் பற்றி நான் இந்த இடத்தில் எதையும் கூற விரும்பவில்லை.

**கேள்வி:**

**காணாமல் போனோரின் உறவுகளின் போராட்டங்களில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு எவ்வாறுள்ளது?**

**பதில்:**

எங்களைப் பொறுத்த வரையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான முழுப்பொறுப்பும்சிறிலங்காஅரசாங்கத்தையேசாரும்.2009ஆம்ஆண்டிற்குப் பின்னர் காணால் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராடுவதற்கான உந்து தலை ஏற்படுத்தியதில் எங்களுக்கு மிகப் பெரிய பங்குண்டு. தாயகத்தில் இந்த மக்களுடன் அடிமட்டத்தில் நாங்கள் பக்கபலமாக நிற்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் நாங்கள் இருக்கின்றோம். அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமையகத்திற்குச் சென்று அங்கே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும். அதுவும் ஒரு சர்வதேச விசாரணை ஊடாகவே அடையப்பட முடியும் என்பதை வலியுறுத்தும் ஒரேயொரு அரசியல் கட்சியாக நாங்களே இருக்கின்றோம்.

குறிப்பாக வேறு எந்த ஒரு அரசியல் கட்சியின் தலைவர்களும் இந்தக் கருத்தை முன்வைப்பது கிடையாது. எங்கள் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் செயலாளரான நான், மற்றும் சட்டத்தரணி மணிவண்ணன் போன்றவர்கள் தான் கடந்த காலத்தில் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளோம்.

எங்களுக்கு எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும்கூட அவற்றைத் தாண்டி நாங்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் உறுதியாக இருக்கின்றோம். எதிர்காலத்திலும் நாங்கள் அந்த நிலைப்பாட்டை தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**கேள்வி:**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில்:**

நாங்கள் கூறக்கூடிய விடயம் என்னவென்றால், தாயகத்தில் இன்று தமிழ்த் தேசத்தினுடைய இருப்பை அழிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நல்லாட்சி என்று சொல்லப்பட்டமைத்திரியின் அரசாக இருக்கலாம் அல்லது தற்போது வந்துள்ள கோத்தபயா அரசாங்கமாக இருக்கலாம். யாராக இருந்தாலும் தமிழ் தேசத்தை அழிப்பதில் எந்தவித கொள்கை மாறுபாடுகளும் இல்லாமல் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்கள். தற்போது பாராளுமன்றத்தில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விஜயகலா, அங்கஜன் போன்றவர்கள் இந்த செயற்பாடுகளுக்கு பரிபூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். கருணா, பிள்ளையான் போன்றவர்கள் அவர்களின் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் கருணாதரப்பு கட்சியும் அந்த செயற்பாடுகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. ஆகவே இந்த நிலை நீடிக்க இடமளிக்கக்கூடாது. இதற்கு முற்று ப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

ஆகவே எதிர்காலத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் இயக்கத்தை பலப்படுத்துவதற்கு புலம்பெயர் தமிழர்கள் முன்வரவேண்டும்.

தொடர்ச்சி 09ம் பக்கம்

# இந்தியாவின் முப்படைகளுக்கும் ஒரே தளபதி நியமனம்





30 டிசம்பர் 2019 அன்று இந்தியாவின் முப்படைகளுக்கான தலைமைத் தளபதி என்ற ஒரு புதிய பதவி உருவாக்கப்பட்டு, இந்த பதவிக்கு ஜெனரல் பபின் ராவத் நியமிக்கப்பட்டார். ஏற்கனவே இருக்கும் படைகளின் 4 தளபதிகளுடன் இவர் ஐந்தாவது தளபதியாக பதவி வகிப்பார். 31 டிசம்பர் 2019 அன்றுடன் ஓய்வு பெறும் நிலையில் இவருக்கு இந்தப் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது 61 வயதை எட்டியுள்ள இவர் 65 வயதுவரை இந்தப் பதவியை வகிப்பார். இதற்காக அரசாங்கம் ஓய்வு பெறும் வயது எல்லை சட்ட விதிகளில் மாற்றம் செய்துள்ளது. ஆனால் தலைமைத் தளபதி பதவியை இவர் எவ்வளவு காலம் வகிப்பார் என்பது தீர்மானிக்கப்படவில்லை.

டிசம்பர் மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மோடி தலைமையில், பாதுகாப்புத்துறை அமைச் சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளி யுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முப்படைகளையும் அதன் துறைகளையும் சார்ந்த அனைத்திற்கும் ஒரே தலைமைத் தளபதியை நியமிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர் நான்கு நட்சத்திர தகுதியை உடைய ஒரு ஜெனரலாக இருப்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டது., இந்தப் பதவி வகித்த உயரதிகாரி, தனது பதவிக்காலம் முடிவடைந்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எந்த அரச, தனியார் பணிகளையும் மேற்கொள்ள முடியாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

1962இல் நடைபெற்ற சீனாவிற்கு எதிரான போரின் போதும், 1971ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போரின் போதும் இராணுவத்தினரின் தகவல்கள் பரிமாறல்கள் ஒழுங்காக செயற்பட முடியாது போனமையால், வெற்றிபெற முடியாமல் போனது என குற்றச் சாட்டுகள் எழுந்தன.

அத்துடன் 1999 கார்கில் போரின் போது, ஊடுருவல் நடந்து இரண்டு வாரங்கள் கழித்தே பதில் நடவடிக்கைகளை இந்திய விமானப் படை எடுத்தது. அப்போதைய தரைப்படைத் தளபதி வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தார். தரை நிலவரங்களைப் புரிந்து கொள்வதில் குழப்பம் இருந்தது, தகவல்கள் சரிவரப் பரிமாறிக் கொள்ளப்படவில்லை, ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துவதா விமானங்களைப் பயன்படுத்துவதா என்பதில் தரைப் படைக்கும் விமானப் படைக்கும் இடையே தகராறு இருந்தது. இதன் காரணமாக கார்கில் மறுஆய்வுக் குழு முப்படைத் தலைமைத் தளபதி என்றொரு பதவியை உருவாக்க வேண்டும் என்று தீவிரமாகப் பரிந்துரைத்தது.

2012ஆம் ஆண்டு நரேஷ் சந்திரா குழுவும் தலைமைத்தளபதி பதவியை பரிந்துரைத்திருந்தது. எனவே முப்படைகளுக்கும் தலைமைத் தளபதி பதவியை உருவாக்க பிரதமர் நரேந்திர மோடி ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தொடங்கினார்.

இந்தப் பதவியை வகிக்கும் ஜெனரல் பிபின் ராவத் அவர்களின் பதவிகளாக பின்வரும் பதவிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சில் உருவாக்கப்பட்டுள்ள இராணுவ துறை செயலாளர் தலைமை, முப்படைகள் தொடர்பான ஆலோசனைகளை பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கும் முதன்மை ஆலோசர், பாதுகாப்புடன் தொடர்புடைய ஆயுதக் கொள் முதல், முப்படைகளின் கூட்டு நடவடிக்கை, பயிற்சி உத்திகள், கேந்திர நடவடிக்கைகள் உட்பட அரசை நடத்தும் ஆட்சியாளர்களுக்கு முப்படை சேவை குறித்த ஆலோசனைகளை வழங்குதல், படைகளுக்கான ஆட்சேர்ப்பு, பயிற்சி ஆகியவற்றை ஒருங்கிணைத்தல், அந்தமான் நிக்கோபாரில் உள்ள முப்படைகளைச் சேர்ந்த படைப்பிரிவு, கேந்திர கட்டளைப் படை, விண்வெளி, சைபர், சிறப்புப் படை ஆகியவற்றின் நிரந்தர தலைவர் பதவி, பாதுகாப்பு சேவை தொடர்பாக நாட்டின் அரசியல் தலைமைக்கு ஆலோசனை வழங்குதல், அணு ஆயுதம் தொடர்பான உத்தரவிடும் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கும் அதிகாரி போன்ற பணிகளை மேற்கொள்வார். அத்துடன் பாது காப்பு அமைச்சரின் நேரடி மேற்பார்வையில் செயற்படும் புதிய தலைமைத் தளபதியாகவும் பணியாற்றுவார்.

இவரின் பதவிகளில் தவிர்க்கப்படும் பதவிகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை பார்த்தால், முப்படைக்குள் இருக்கும் தனிப்பட்ட பிரச்சினைகளை அந்தந்த படைத் தளபதிகளே கவனிப்பர். அதில் இவர் தலையிட முடியாது. அத்துடன் இவருடன் பணியாற்றுவதற்கு ஒரு படைப்பிரிவும் கிடையாது. படைகளின் தளபதிகளுக்கு இவர் உத்தரவுகள் பிறப்பிக்க முடியாது. முப்படைத் தளபதிகளின் கொள் முதல் திட்டத்தையும் இவர் தடுக்க முடியாது. அவரின் பணி அரசிற்கு ஆலோசனை வழங்கு வதும், முப்படைத் தளபதிகளுக்கு அரசின் முடிவுகளை அறிவிப்பதும், அவற்றை செயற்படுத்துவதுமாகவே இருக்கும். இது இரு தரப்பினருக்கிடையிலான ஒரு பாலமாக செயற்படும் பதவியாகவே இருக்கும்.

1978ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டேராடூனில் உள்ள இராணுவ பயிற்சி நிலையத்தில் கூர்க்கா பிரிவின் ஐந்தாவது படையணியில் சேர்ந்தார். அதன் பின்னர் டேராடூனில் உள்ள இந்திய இராணுவ பயிற்சி நிலைய தலைமை அதிகாரியாக பதவி வகித்தார். அத்துடன் பயிற்சி அதிகாரி, தளபாட பிரிவு அலுவலர், துணை இராணுவ செயலாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.


மேலும் தேசிய பாதுகாப்பு மற்றும் தலைமை குறித்து பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன் சென்னை பல்கலைக் கழக பாதுகாப்பு குறித்த பட்டப்படிப்பை முடித்து எம்.பில் பட்டம் பெற்றார். அத்துடன் மேலாண்மை மற்றும் கணினி அறிவியல் பட்டயப்படிப்பை முடித்துள்ளார். அத்துடன் 2016 டிசம்பர் மாதம் இராணுவத் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட பதவியானது ஒரு பெயர் கூறும் பதவியாகவே பார்க்கப்படுகின்றது. இந்தியா தன்னை வல்லரசாகக் காட்டிக் கொள்ளவும், தான் இராணுவ ரீதியாக வளர்ந்து வருகின்றேன் என்பதை அறிவிக்கவுமே இப்படியான ஒரு பதவியை நியமித்துள்ளது.

தற்போது இந்தியாவை பெரிய போராட்ட களமாக மாற்றியுள்ள குடியுரிமை திருததச் சட்டத்திற்கு எதிரான போராட்டத்தை பபின் ராவத் கண்டித்துள்ளதுடன், அந்த போராட்டங்களை வழிநடத்திச் செல்பவர்களையும் வன்முறை யாளர்கள் என சித்தரித்துள்ளார். அத்துடன் இந்தியாவில் புரட்சி நடத்தும் மக்கள் அதை ஒடுக்கக் காத்திருக்கும் இராணுவத்தைக் கண்டு அஞ்ச வேண்டும் என்றும் கூறியிருந்தார். இவரின் இந்தக் கூற்றானது பல எதிர்ப்புகளையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளதுடன், இந்தியா இராணுவத்தினரின் சர்வாதிகார ஆட்சியை ஆரம்பித்து விட்டது என்று இராணுவத் தளபதி மறைமுகமாகக் கூறுவதாக மக்கள் கருதுகின்றனர்.

இராணுவத்தினர் எப்போதும் அரசியல் ரீதியான செயல்களில் ஈடுபடவோ அல்லது அது தொடர்பான கருத்துக்களையோ தெரிவிக்கக் கூடாது என்பதே நியதி. இவர் அதையும் மீறி செயற்படுகின்றார் என ஓய்வு பெற்ற படையதிகாரிகள் உட்பட பலர் இவருக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். பதவியேற்றதுமே இவர் இப்படியான கூற்றுக் களைக் கூறியிருப்பதானது, எதிர்காலத்தில் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள் எந்தளவில் இருக்கும் என்று மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். எல்லையோர படையினருடன் தாக்குதல்களை மேற்கொண்டு நாட்டைக் காப்பாற்றுவார்களா? அல்லது நாட்டிற்குள்ளேயே போராடும் மக்களை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா? என்பது மக்களின் கேள்வி யாக உள்ளது.

# சென்னையில் ஓர் புத்தக திருவிழா




**வா**சிப்பதால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான் என சொல்வதுண்டு. ஆனால் இந்த டிஜிட்டல் உலகில் வாசிப்பு என்பது மறைந்து எல்லாமே டிஜிட்டல் தேடல், டிஜட்டல் வாசிப்பு என்றதாகி விட்டது. இதை முறியடிப்பதாக இருந்தது சென்னை புத்தகக் கண்காட்சி. சென்னையில் வருட ஆரம்பத்தில் ஒவ்வொரு ஆண்டும் புத்தகக் கண்காட்சி நடைபெறுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு பெருந்தொகையான மக்கள் இந்த புத்தக கண்காட்சியை கண்டுகளிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளவர்களாக உள்ளனர். முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு மக்கள் கூட்டம் இம்முறை கண்காட்சிக்கு வருகை தருவதை காணமுடிகின்றது. இது வாசிப்பு என்பதை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை என்பதை உறுதிப்படுத்தியது.




சென்னை, நந்தனம் YMCA மைதானத்தில், சென்னையின் 43ஆவது புத்தககக் கண்காட்சி ஜனவரி 9ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. 09ஆம் திகதி கண்காட்சியை தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சமி தொடக்கி வைத்தார். இம்முறை சுமார் 700 அரங்குகளில் 15 இலட்சம் தலைப்புகளில் 2கோடி புத்தகங்கள் விற்பனைக்கு வந்துள்ளது.

சாதாரண நாட்களில் பிற்பகல் 3.00மணி முதல் 9.00 மணிவரையும், விடுமுறை நாட்களில் காலை 11.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரையும் கண்காட்சி நடைபெறுகின்றது. 10 ரூபா நுழைவுக் கட்டணமாக அறவிடப்படுகின்றது. ஆனால் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படுகின்றது. புத்தகங்களுக்கு 10 வீத விலைக்கழிவு வழங்கப்படுகின்றது.

24.08.1976இல் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் புத்தக ஆர்வலர்களின் தேவைக்காகவும், அவர்களின் வாசிப்பை மேம்படுத்தவும் ஒரு கூட்டமைப்பை உருவாக்கினார்கள். இதற்காக சென்னை அண்ணாசாலையிலுள்ள மதுரஸா மேல்நிலைப் பள்ளியின் மைதானத்தில் ஓர் புத்தகக் கண்காட்சியை நடத்தியிருந்தனர். 28 ஆண்டுகளாக அதே வளாகத்தில் ஆண்டிற்கொரு முறை இந்த புத்தகக் கண்காட்சி நடைபெற்று வந்தது. இதன் மூலம் புத்தக வாசகர்களும், வெளியீட்டாளர்களும், விற்பனையாளர்களும் பல்கிப் பெருகத் தொடங்கினர். இவர்கள் அந்தக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டனர். தற்போது அந்தக் கூட்டமைப்பில் 489 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

தமிழகத்தில் சென்னையில் 41 ஆண்டுகளும், மதுரையில் 12 ஆண்டுகளும், கோவையில் 4 ஆண்டுகளும் புத்தக கண்காட்சியை வருடந்தோறும் நடத்தி வருகின்றது. இங்கு தமிழ் ஆங்கிலம், மற்றும் பல இந்திய மொழிகளிலும் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், விற்பனையும் செய்யப்பட்டு வருகின்றது.

சென்னை புத்தகக் கண்காட்சியில் பொதுமக்களுக்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அம்புலன்ஸ் சேவை, தீயணைப்பு சேவை, உணவுச்சாலைகள், மலசலகூட வசதிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி வசதிகள், செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**கல்யாணி**

கண்காட்சியில் முதன்மைப்படுத்தும் விடயமாக கீழடி அகழ்வாராய்ச்சி விளங்குகின்றது. இந்த கண்காட்சி பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள ஓரிடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு 2600 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஜல்லிக்கட்டுக் காளைகளின் எலும்புகள், சுடுமண் தாழிகள், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கீழடி நாகரீகம் தொடர்பான புத்தகங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

பாடசாலை, கல்லூரி மாணவர்களுக்கான புத்தகங்கள், பெண்ணியம் தொடர்பான. சுற்றுச்சூழல் தொடர்பான, ஆன்மீகம், பல உள்நாட்டு, வெளிநாட்டுத் தலைவர்கள் பற்றிய நூல்கள், வரலாற்று, சங்ககால இலக்கிய நூல்கள். உதாரணமாக பொன்னியின் செல்வன் நூலை சிறுவர்கள் ஆர்வமாகப் படிப்பதற்காக சித்திரச் சிறுகதை நூலாக வெளியிட்டுள்ளனர். இவை தவிர ஆய்வுகூடங்களுக்குத் தேவையான உபகரணங்கள், வரைபடங்கள், சித்த மருத்துவம் தொடர்பான நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், இப்படியே அனைத்து தலைப்புகளிலும் நூல்கள் விற்பனையாகின்றன.

ஒவ்வொரு நிலையங்களும் தங்களின் பதிப்புகளை விற்பனை செய்கின்றன. ஆனால் ஈழத்து வரலாற்று நூல்கள், மற்றும் விடுதலை தொடர்பான நூல்கள், தேசியத் தலைவர் தொடர்பான நூல்கள் என ஈழத்துப் படைப்புகள் பல காணப்படுகின்றன. எந்த ஒரு நிலையத்திற்குச் சென்றாலும் அங்கு ஈழத்துப் படைப்புகள் காணப்படுகின்றன. இவை அதிகமாக மக்களால் உற்றுநோக்கப்படுகின்றன. ஈழத்து எழுத்தாளர்கள், கவிஞர்களின் அனேக படைப்புகள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் ஈழத்திலுள்ள ஆன்மீகத் தலங்கள், அவற்றின் வரலாறுகள் போன்றனவும் விற்பனை செய்யப்படுகின்றன.

முள்ளிவாய்க்கால் தொடர்பான மக்களின் நேர்காணல் நூல்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின் போராட்டங்கள் பற்றிய நூல்கள், ஈழப் போராட்டம், சிறைச்சாலை பற்றியது, பெண்கள் போராட்டங்கள் பற்றியது என பல தலைப்புகளிலான நூல்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ஈழ போராட்ட ஆர்வலர்கள் இந்த நூல்களை அதிகம் வாங்குவதை காணக்கூடியதாக உள்ளது. அட்டைப் படங்களிலேயே கதையின் சுருக்கம் விளங்கக்கூடியவாறு அட்டைப்படங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாலும், புத்தகத்தின் விலை ஓரளவு குறைவாக இருப்பதாலும் அனைவராலும் அவற்றை வாங்க முடிகின்றது.

இப்போது ஆண்டின் முதல் மாதம் என்பதால், நாட்காட்டி விற்பனை விசேடமாக நடைபெறுவது வழக்கம். ஆனால் இங்கு தேசியத் தலைவர் அவர்களின் படங்களைத் தாங்கிய மாதாந்த நாட்காட்டி அனேக நிலையங்களில் விற்பனைக்கு வந்துள்ளன. ஒரு நாட்காட்டியின் விலை 100 ரூபா என்பதால், பெரும்பாலானோர் அதை வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.




ஈழத் தமிழர் தொடர்பான வெளியீடுகள் இங்கு அதிகம் விற்பனையாகி வருகின்றது. இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்பதால், அவர்களின் வெளியீடுகளை தடை செய்ய வேண்டும் என்று தமிழக பாஜக உறுப்பினர்கள் கோரியிருந்தனர். இதற்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஆனால் அந்த வெளியீடுகள் எவையும் அப்புறப்படுத்தப்படவில்லை. தொடர்ந்தும் அங்கு விற்பனையாகிய வண்ணமே இருக்கின்றன.

தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளரான அன்பழகன் புத்தகக் கண்காட்சியில் தனது ஆக்கங்களை காட்சிப்படுத்தியிருந்தார். அதில் அவர், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் தமிழக அமைச்சர்களின் ஊழல்கள் என சில புத்தகங்களை எழுதி வைத்திருந்தார். இதன் காரணமாக பொலிசார் அவரை கைது செய்திருந்தனர். இவரின் கைதிற்கு பல அரசியல்வாதிகளும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

புத்தக கண்காட்சியில் புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களும் வருகை தந்துள்ளனர். எனவே அவர்களுடன் கலந்துரையாடும் சந்தர் ப்பங்களும் மக்களுக்கு கிடைக்கின்றன. பொன்னியின் செல்வன் சித்திரத்தை வரைந்த ஓவியரும் அங்கு இருந்தார். ஓவியத்தின் மூலம் சிறுவர்கள் நூல்களை விரும்பிப் படிப்பார்கள் என்பதால் இந்த சித்திரங்களை வரைந்ததாக கூறினார்.

# தமிழர் மரபுரிமை மாதம்

# மனித உரிமைகளையும் நீதியையும் நிலைநாட்ட உதவட்டும்

பற்றிமாகரன்

*2016 முதல் கனடா அரசாங்கம் சனவரி மாதத்தைத் தமிழர் மரபுரிமை மாதமாகப் பாராளுமன்றத்தில் பிரகடனப்படுத்திக் கொண்டாடி வருகிறது. இவ்வருடம் முதல் பிரித்தானியத் தமிழர் வர்த்தகச் சேம்பர் சனவரி மாதத்தை இலண்டனில் தமிழர் மரபுரிமை மாதமாகக் கொண்டாடத் தொடங்கி ஐக்கிய அரசையும் சனவரி மாதத்தைத் தமிழர் மரபுரிமை மாதமாகப் பிரகடனம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*




மரபுரிமை என்பது ஒரு மனிதனால் அல்லது மனித இனத்தால் கடந்த காலத்தில் இருந்து பெற்ற எவற்றால் எல்லாம் இன்றைய அடையாளத்துடன் இருப்பதாகக் கருதப்படுகிறதோ அவற்றைப் பேணவும், நிகழ்காலத்தில் கடைப்பிடிக்கவும், எதிர்காலச் சந்ததிக்கு அவற்றை எவ்வித அழிவுமின்றிப் பாரப்படுத்தவும் உள்ள இயல்பான உரிமை. இந்த மரபுரிமை என்பது பிறப்பால் ஒரு மனிதன் அடைகின்ற அவனது கலாச்சார உரிமையாகவும், மற்றைய மனித உரிமைகளுக்கு எல்லாம் அடித்தளமானதுமான உரிமையாகவும் உள்ளது. இதனால் கலாச்சார உரிமை என்பதும் மனித உரிமையே ஆகிறது.

ஒரு இனத்தின் கலாச்சாரம் அழிக்கப்பட்டால் அந்த இனமே அழிக்கப்பட்டு விடும் என்பதனால் ஒரு இனத்தின் கலாச்சாரத்தை திட்டமிட்ட முறையில் அழித்தல் கலாச்சார இன அழிப்பு என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒருமித்த கருத்தாக உள்ளது. இதனால் தான் ஐக்கிய நாடுகள் சபை அது தொடங்கப்பட்ட நாள் முதல் கலாச்சார உரிமைகளைப் பேணுதல் ஒவ்வொரு அரசினதும் தலையாய கடமை என வலியுறுத்தியும் வருகிறது. இந்த வகையில் தான் 16.11.1972ஆம் ஆண்டு பாரிசில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு உலகின் கலாச்சாரத்தையும் இயற்கை மரபுரிமைகளையும் பாதுகாத்தலுக்கான சாசனத்தை உருவாக்கி, 17.12.1975 முதல் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைக்கு கொண்டுவரச் செய்தது. 2002ஆம் ஆண்டை மரபுரிமை பேணும் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது. மனித உரிமைக் கவுன்சிலும் (A/HRC/17/38) கலாச்சார உரிமையினை அடைவதற்கும் அனுபவிப்பதற்கும் உள்ள உரிமை குறித்து சிறப்புக் கவனம் செலுத்தி அதனை முன்னெடுக்க உழைத்து வருகிறது. 2017இல் 'கலாச்சார மரபு உரிமை'என்பது நிகழ்காலத்தில் முக்கியமானதாக இருப்பதற்குக் காரணம் அது கடந்த காலத்தைக் குறித்த செய்திகளைத் தருவதாகவும் எதிர் காலத்தைக் கட்டி எழுப்புவதற்கான பாதையாகவும் இருப்பதே ஆகும். அது வெறுமனே அதனைப் பேணுதல் என்பதோடு மட்டும் அமையாது முழு மனிதத்துவப் பரிமாணத்தையும் பேணுவதாகவும் உள்ளது. இதனால் அனைத்துலகிலும் நடைபெறும் கலாச்சார உரிமைகளைத் தடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். கலாச்சார உரிமைகள் மனித உரிமைகள் என்ற வகையில் அணுகப்பட வேண்டும். மக்களின் கலாச்சாரத்தையும் அவர்களின் உரிமைகளையும் பிரித்துப் பார்க்க முடியாது" என ஐக்கிய நாடுகள் சபையின் கலாச்சார உரிமைகளுக்கான சிறப்புப் பதிவாளர் கரிமா பெனவுனி (Karima Bennoune) மிகத் தெளிவாகத் தமது அறிக்கையில் எடுத்துரைத்தார். கல்லறைகள், யுத்த நினைவுச் சின்னங்கள், சிலைகள் என்பன வெறுமனே சடப் பொருட்கள் அல்ல அவற்றாலேயே மக்களின் இனத்துவம் மொழித்துவம் அடையாளம் பெறுகிறது. எனவே அவைகளை அழிப்பதும் ஆட்களை இன அழிப்பு செய்வது போன்ற கொலைச் செயலே என ஐக்கிய நாடுகள் சபையில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

எனவே தைப்பொங்கலை மையமாக வைத்து தமிழினத்தின் பண்பாட்டுப் பெருமை பேசுவது தமிழர் மரபு மாதத்தில் எந்த அளவுக்கு முக்கியமோ அதைவிடப் பலமடங்கு முக்கியமானதாக ஈழத்தமிழ் மக்கள் மீது 10.01.1974இல் நடாத்தப்பட்ட யாழ்ப்பாண 4வது உலகத் தமிழராய்ச்சி கலாச்சார இன அழிப்பு முதல் இன்று வரை தொடர்ச்சியாக சிறிலங்கா அரசாங்கம் ஈழத்தமிழர்களுக்குச் செய்து வரும் கலாச்சார மரபுரிமை அழிப்புக்களை மனித உரிமைகள் மீறல் இனஅழிப்பு, இனத்துடைப்பு, மனிதாயத்துக்கு எதிரான யுத்தக் குற்றச் செயல்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனம் மற்றும் அனைத்துலகச் சட்டங்கள், மரபுகளுக்கு எதிரான மனித உரிமை வன்முறைகள் என்பதை உலகிற்கும் உலகத் தமிழர்களுக்கும் எடுத்துச் சொல்லி ஈழத்தில் சீராக்கல்களை ஏற்படுத்தவும், சட்டங்களையும் சட்ட அமுலாக்கங்களையும் ஒழுங்குபடுத்தவும், அவற்றின் வழி உண்மைகளை நிலைநிறுத்தவும் உழைக்கும் மாதமாக இந்தத் தமிழர் மரபு மாதம் அமையட்டும். நிதியைப் பெறுதல் என்பது சீராக்கல், ஒழுங்குபடுத்தல், உண்மையை நிலைநாட்டல் வழியான பயன்பாடு என்பதை உலகத் தமிழர்கள் மனதிருத்திச் செயற்பட இந்த மரபுரிமை மாதம் உதவட்டும்.

பிரித்தானியப் பிரதமர், பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர், கனடாவின் பிரதமர், உட்பட உலகத் தலைவர்கள் இந்தத் தமிழர் மரபுரிமை மாதத்தின் மையமான தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் குறித்து அளித்துள்ள வாழ்த்துக்களில் தைப்பொங்கல் அறுவடை நன்றித் திருநாள் என்பதற்கு அப்பால் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் அவர்கள் வாழும் நாடுகளின் கல்வி, வர்த்தாக, பொருளாதார, மருத்துவ, துறைகளுக்கு அவற்றின் வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்புக்களையே வியந்து போற்றி தமிழினத்தின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்க காலம் முதலான தமிழின மரபணுத் தன்மையை மீள் உறுதிப்படுத்தியுள்ளனர். மனிதத்துவத்துக்கு முதன்மை கொடுக்கும் பேரிலக்கியங்களின் சொந்தக்காரரான இந்தத் தமிழினத்தின் பிரிக்கப்பட முடியாத அங்கமான ஈழத்தமிழினத்தின் மனிதத்துவத்தை மண்மீது காக்கும் கடமை உலகத் தலைவர்களுக்கும் ஒவ்வொரு தமிழருக்கும் உண்டென்பதே மரபுரிமை மாதம் ஒரு தலையாய செய்தியாக உள்ளது.

மேலும் ஈழத்தில் சிறிலங்காவின் எதிர்கட்சித் தலைவர் உட்பட இந்தியத் தலைவர்கள் வரை தைப்பொங்கல் தமிழர் திருநாள் என்பதை மாற்றியமைக்கக் கூடிய வகையில் இந்துக்களின் கொண்டாட்டமாகவே குறிப்பிட்டு வாழ்த்து தெரிவித்தமையைக் காணலாம். இன்டர்வெயித் வருடாந்த நாட்காட்டியில் கூட தை 15 மகர சங்கிரதை என்றும் இந்தியாவின் வசந்தகாலத் தொடக்க நாள் என்றுமே குறிப்பிட்டுள்ளமை எந்த அளவுக்குத் தைப்பொங்கல் தமிழர் திருநாள் என்ற நிலை மாற்றப்பட்டு, தமிழர்களின் அடையாளங்கள் படிப்படியாகச் சிதைக்கப்பட்டு வருகிறது என்பதற்குச் சிறு உதாரணமாகிறது. இந்நேரத்தில் தமிழரின் மரபுரிமை மாதமான சனவரியை உலகத் தமிழர்கள் தங்களின் கலாச்சாரத் தனித்துவத்தை உலகிடை நிறுவும் காலமாகப் பயன்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழரின் கடமையாகிறது.

• • •

## எமது கட்சி மட்டுமே.... தொடர்ச்சி..

அவர்களிடமிருந்து மூன்று விதமான உதவிகளை எதிர்பார்க்கின்றோம். முதலாவது தாயகத்தில் இருக்கும் தங்கள் உறவுகளுடன் தொடர்பு கொண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய முன்னணியைப் பலப்படுத்த வேண்டும் என்று ஒரு கருத்தை தீவிரமாக முன்னெடுக்க வேண்டும்.

இரண்டாவது தாயகத்தில் தமிழ்த் தேசிய முன்னணியை கட்டமைப்பு ரீதியாக பலப்படுத்துவதற்கும் கொள்கை ரீதியாக முன்னெடுப்பதற்கும் வேண்டிய உதவிகளை அந்த மக்கள் வழங்குவதற்கு முன்வரவேண்டும். மூன்றாவது தேர்தல் என்று வரும் போது புலம்பெயர் மக்கள் தாயகத்திற்கு வந்து எங்களைப் பலப்படுத்தக்கூடிய வகையில் அவர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோத்தபயா ராஜபக்ஸ என்கின்ற அதிதீவிர பௌத்த இனவாத சிந்தனையுடையவரை வெல்ல வைப்பதற்காக உலகெங்கும் வாழும் பௌத்த பேரினவாத சிந்தனையுடைய இலட்சக் கணக்கான சிங்கள மக்கள் இலங்கைக்குத் திரும்பி அவருக்காக வாக்களித்துள்ளனர். அவர்கள் ஒரு இனவாத செயலைப் புரிந்திருக்கின்றார்கள். எங்களைப் பொறுத்த வரையில் எங்களின் அணுகுமுறை என்பது ஒரு இனவாத அடிப்படையிலானது அல்ல. நாங்கள் வடகிழக்கில் இருக்கக்கூடிய சிங்கள, முஸ்லிம் மக்களை அனுசரித்து அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். ஆகவே எங்களின் தரப்பு வெல்லுகின்ற போது தான் நிரந்தரமான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான இந்த அணியைப் பலப்படுத்துவதற்கு தேர்தல் காலங்களில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தேசங்களிலுள்ளவர்கள், இலங்கையில் வாக்குரிமை உள்ளவர்கள் நிச்சயமாக இங்கு வந்து தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.




# ஈழத்தமிழர் இனவழிப்பில் ரஷ்யாவின் பங்கு

தமிழில் **ந.மாலதி**

**உ**ள்நாட்டு விவகரங்களில் ஏனையவர்கள் தலையிடக் கூடாது என்று சிறிலங்காவுக்கு அண்மையில் வருகை தந்த சீன, ரஷ்சிய உயர்மட்ட அரசியல்வாதிகள் கூறியுள்ளனர். இவர்களின் பொன்மொழிகளின் பின்னணியை சிறிது ஆராய்வோம்.

இராணுவ ஹெலிகொப்டர்களும் போர் விமானங்களும் ஈழத்தமிழர் மேல் குண்டுமழை பொழிந்து மக்களை அழித்தொழித்தது, ஈழத் தமிழரின் ஆழ்மனதில் என்றும் அழியாமல் பதிந்துவிட்ட கொடூரம்.



Annex I

P. O. Box 372
Telephones 430060 430870

My No. D/1593/SPL/8
Your No.

MINISTRY OF DEFENCE, No. 15/5, Baladaksha Mawatha, Colombo 03, Sri Lanka

Date 20.12.2000

Commander of the Army,

**Purchase of 10,000 Thermoberic Flame Throwers**

I refer to your Sinhala letter MGO/236/2000(59) dated 5.12.2000.

The course of action proposed in para 3 of your letter is approved.

S. Medawewa
Addl. Secretary

SEEN

2001ஆம் ஆண்டில் சிறிலங்கா இராணுவத்தின் ஜெயசிக்குறு போர் நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் செக்மேற் நிலைக்கு கொண்டுவந்ததாலேயே போர்நிறுத்த ஒப்பந்தம் சாத்தியமானது. உடைக்க முடியாதது என்று ஐ-அமெரிக்க பாதுகாப்பு நிபுணர்கள் விபரித்த சிறிலங்கா இராணுவத்தின் ஆனையிறவு தளத்தை விடுதலைப்புலிகள் அப்போது உடைத்தார்கள். இஸ்ரேலினதும் ரஷ்சியாவினதும் கிபிர் விமானங்கள் புறப்படும் தளங்களை கொண்டுள்ள கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது அன்றைய விடுதலைப்புலிகளின் தாக்குதல் அவர்களின் இராணுவ வல்லமையை உலகுக்கு அறிவுறுத்தியது.



ரஷ்யத்தயாரிப்பு தாக்குதல் உலங்கு வானூர்தி

ஜெயசிக்குறு தோல்வியால் ஆத்திரமடைந்த இனவழிப்பு சிந்தனையில் ஊறிய சிறிலங்கா அரசு, தமிழீழ நடைமுறை அரசை அழிப்பதற்காக கொடூரமான ஆயுதங்களையும் தமிழருக்கு எதிராக கையாளும் திட்டங்களை தீட்டியது. டிசம்பர் 2000ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்கா ஆட்சி thermobaric ஆயுதங்களை கொள்வனவு செய்ய முடிவு செய்தது.

ராஜபக்சா ஆட்சிக்கு முன்னரே, டிசம்பர் 2000ஆம் ஆண்டு, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு 10,000 Thermobaric Flamethrowers வாங்குவதற்கு முடிவு எடுத்ததை உறுதிப்படுத்தும் ஆவணம்.



ரஷ்யத்தயாரிப்பு Thermobaric எறிகணை செலுத்தி

சிறிலங்கா அரசின் தாக்குதல்களை எதிர்க்கும் விடுதலைப்புலிகளின் வல்லமையை அழித்த 2009 நடவடிக்கைகளை முக்கியமாக மேற்குலகமும் இந்தியாவும் இணைந்து ஒருங்கமைத்து கொடுத்தது. அதே நேரம் தமிழீழத்தின் அழிவுகளை சீனாவும் ரஷ்சியாவும் பாகிஸ்தானும் கொடுத்த அழிவாயுதங்கள் நடத்தி முடித்தன.

இவற்றைவிட கொடுமையாக 2009இல் தமிழீழ தனியரசை சிதைத்த குண்டுகளாக இருந்தவை, ஐ-அமெரிக்காவும் இந்தியாவும் கொடுத்த மூலோபாய புலனாய்வுகள், வழிநடத்தல்கள், ஆகாய மற்றும் கடல் கண்காணிப்புகள் தான். அத்துடன் அவர்கள் கொடுத்த இராணுவ ரீதியான கிளர்ச்சி எதிர்ப்பு ஆலோசனைகளும் இருந்தன. அதே சக்திகள்தான் ஈழத்தமிழர் புலம்பெயர் சமூகத்தின் மேல் ஒரு அரசியல் போரையும் அவிழ்த்து விட்டிருந்தன. இதன் நோக்கம் தமிழர் போராட்டத்தின் உயிர்நாடியாக இருந்த புலம்பெயர் சமூகத்தின் ஆதரவை அழிப்பதே.

ஐ-அமெரிக்க கிளர்ச்சி எதிர்ப்பானது ஆயுதங்கள் வழங்குவதாக கூறி, விடுதலைப் புலிகளின் இராணுவப் புலனாய்வு பிரிவுடன் தொடர்புடைய ஈழத்தமிழர் புலம்பெயர் சமூகத்திலிருந்த சில ஏமாளிகளை, கைது செய்து அவர்களின் சொத்துக்களையும் முடக்கியது.

அதே நேரம், ஐ-அமெரிக்க இராணுவத்தின் புலனாய்வுடனும் ஆலோசனைகளுடனும் 30 மாதங்களாக இரகசியமாக தொடர்ந்த நடவடிக்கையில், விடுதலைப்புலிகளின் கப்பல்கள் சர்வதேச கடலில் தேடி அழிக்கப்பட்டன.

இதுவரை அறியப்பட்டவற்றில், நேரடியாக கொலை செய்யாத ஆனாலும் மிகவும் தீர்க்கமான ஆயுதமாக அமைந்தது ஒன்றும் உண்டு. அதுதான் மே 2009 இல் ஐ-அமெரிக்க ஆலோசகரான Burns Strider அன்று ஐ-அமெரிக்க செயலாளராக இருந்து ஹிலரி கிளின்டனுக்கு அனுப்பிய மின்னஞ்சல்.

Strider ஹிலரியின் குரு. அவர் ஹிலரிக்கு அனுப்பிய மின்னஞ்சலில் இவ்வாறு சொன்னார், "விடுதலைப்புலிகள் முற்றாக தோற்கடிக்கப்பட வேண்டும். அதற்காக சிறிலங்கா அரசால் பொது மக்கள் கொல்லப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளலாம். அவ்வாறே களத்தில் நிற்கும் உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் பிரதிநிதிகள் கருதுகிறார்கள்"

2009இல் தமிழீழ நடைமுறையரசு அழிக்கப்பட்டதற்கு கோத்தபாயாவின் திறமை காரணமல்ல. அவருடைய இனவழிப்பு சிந்தனை



UNCLASSIFIED U.S. Department of State Case No. F-2014-20439 Doc No. C05758456 Date: 06/30/2015

RELEASE IN PART B6

From: H <hrod17@clintonemail.com>
Sent: Monday, May 4, 2009 9:40 AM
To: 'Cheryl.mills' 'Jake Sullivan' B6
Subject: Fw: Some intel for you...

Do you know anything about this--from any angle?

----- Original Message -----
From: Burns Strider
To: H
Sent: Mon May 04 09:36:17 2009
Subject: Some intel for you...

This is about Sri Lankan Govt and the Tigers...

I have a good source.

This was shared to me at my and Karen's Derby Party yesterday (can you believe the 50 to 1 odds winner?).

There was a meeting held with Geitner asked for and led by IMF... They told him you were intruding into his domain by ordering/telling IMF to suspend funding to Sri Lakan Govt.

My take is that the people on the ground both with World Bank and IMF believe the Tigers need to be completely defeated and any collateral damage inflicted on private people by SL govt in process is ok... They also believe Tigers are better at propaganda than SL govt...

I have no idea what reality is... I know all about the conflict because there's been so much written over time but no idea of reality on ground.

My point is that IMF/World Bank is hoping to get Geitner to intervene and they recently played to his sense of who is US point person on IMF... So, that's what I know. I'll keep my ears open.

யும் உலக சக்திகள் கொடுத்த மூலோபாய உதவிகளுமே காரணம்.

போரின் உச்சக் காலகட்டத்தில் "இந்திய மூவரும்" "ரோக்கியோ இணைத் தலைமைகளும்" ஆற்றிய பங்கைப் பற்றி அண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பதியப்பட்டிருக்கிறது. இந்திய மூவரில் இருவரான அன்றைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் M.K நாராயணன் மற்றும் அன்றைய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் இருவரையும் சம்பந்தன் தனது உரையில் குறிப்பிட்டார். அவர் குறிப்பிடாத மூன்றாமவர் விஜய் சிங் அன்றைய பாதுகாப்பு செயலாளர்.



ரஷ்யத்தயாரிப்பு மிக் தாக்குதல் விமானம்

சிறிலங்காவுக்கு வருகை தரும் ரஷ்சியாவின் வெளிவிவகார அமைச்சர், லவ்ரோவ், சிறிலங்கா பத்திரிகைக்கு கொடுத்த மின்னஞ்சல் நேர்காணலில் ஐ-அமெரிக்கா முன்வைக்கும் "சுதந்திர திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியம்" என்பது ஒரு ஒருங்கிணைக்கும் கோட்பாடு அல்ல என்றார். "அதன் உண்மையதன நோக்கம் இப்பிராந்தியத்திலுள்ள அரசுகளுக்கிடையே அண்மையில் உருவாகியுள்ள உறவுகளை உடைத்து அவைகளை சிறு பிரிவுகளாக பிரித்து தனது மேலாதிக்கத்தை நிறுத்துவதே" என்றார். அதிகார சக்திகள், ரஷ்சியா உட்பட, கொண்டு வரும் அழிவுகளைப் பற்றி தமிழருக்கு நன்றாகவே தெரியும்.

தொடர்ச்சி 13ம் பக்கம்

# தாக்குதலில் பெருமளவான இராணுவத்தினர் பலி

## நைஜீரியா நாட்டின் இராணுவத் தளபதி நீக்கம்



இரு பெரும் தாக்குதல்களைத் தொடர்ந்து நைஜீரியா நாட்டின் இராணுவத் தளபதியை பதவியில் இருந்து நீக்கியுள்ளது அரசு.

தொடர்ச்சியாக இடம்பெற்ற இரு தாக்குதல்களில் 160 இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இராணுவத் தளபதி ஜெனரல் அகமட் மொகமீட் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இந்த தாக்குதல்களில் பெருமளவானோர் காயமடைந்திருந்தனர். புதிய இராணுவத் தளபதியாக பிரிகேடியர் ஜெனரல் சலிபோ மோடி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் ஜேர்மனியில் உள்ள நைஜீர் நாட்டின் தூதரகத்தில் படைத்துறை ஆலோசகராக பணியாற்றியவர்.

கடந்த இரண்டு வருடங்களாக இராணுவத் தளபதியாக அகமீட் பதவி வகித்த போதே தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஐ.எஸ்.ஐ.எல் மற்றும் அல்குவைதா ஆகிய ஆயுதக்குழுக்களே இந்த தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த 9ஆம் நாள் இடம்பெற்ற தாக்குதலில் 89 இராணுவத்தினரும், 77 ஆயுதக் குழுவினரும் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதல்களில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்கப் படையினரும் நைஜீர் நாட்டுப் படையினருடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதலிலும் 71 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். ஆயுதக் குழுவினர் மாலி, பெர்கியா போசோ ஆகிய இடங்களில் இருந்து வந்து தாக்குதல் நடத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் இடம் பெற்ற தாக்குதல்களில் 400 பேர் இங்கு கொல்லப்பட்டிருந்தனர். நைபீர் நாட்டில் 2014 ஆம் ஆண்டில் இருந்து ஜி-5 எனப்படும் ஐந்து நாடுகளின் படையினர் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

2012 ஆம் ஆண்டில் இருந்து இடம் பெறும் தாக்குதல்களில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாடு தனது 4500 படையினரை அங்கு நிறுத்தியுள்ளதுடன், மேலும் 220 படையினரை அங்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

# மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கப்படைத் தளங்கள்


ஈரானின் இராணுவ ஜெனரல் குசேம் சுலைமனியினை அமெரிக்கா படுகொலை செய்த சில நாட்களில் ஈரான் படையினர் ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்த தாக்குதலின் பின்னர் கருத்து தெரிவித்த ஈரானின் அரச தலைவர் கசான் றொகானி, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இருந்து அமெரிக்க படையினரை முற்றாக வெளியேற்றுவதே அமெரிக்கா மேற்கொண்ட படுகொலைக்கான இறுதியான பதில் என தெரிவித்திருந்தார்.

இந்த பிராந்தியம் முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ள ஏவுகணைத் தாக்குதல்களின் முதலாவது முயற்சியே தற்போதைய தாக்குதல் என ஈரானின் இராணுவம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் ஏறத்தாழ 60,000 தொடக்கம் 70,000 அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளதாக அமெரிக்காவின் மத்திய கட்டளை மையம் தெரிவித்துள்ளது. மேலும் படையினரை அங்கு நகர்த்தவுள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மத்திய கிழக்கு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளில் எங்கு எங்கு அமெரிக்கத் தளம் உள்ளது என்பதை கீழ் வரும் வரைபடத்தில் நீங்கள் பார்க்கலாம்.




# கெயிட்டி பத்து ஆண்டுகளின் பின்னரும்

## பூமி அதிர்வில் இருந்து மீளவில்லை



2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கெயிட்டி பகுதியில் இடம்பெற்ற பூமி அதிர்வினால் 250,000 மக்கள் கொல்லப்பட்டிருநதனர். மேலும் ஒரு மில்லியன் மக்கள் தமது வாழ்விடங்களையும் இழந்திருந்தனர்.

7.0 ரிக்டர் அளவுடைய இந்த பூமி அதிர்வின் பாதிப்புக்கள் பத்து ஆண்டுகளைக் கடந்தும் அந்த தேசத்தை பாதிப்புக்கு உள்ளாக்கி வருகின்றது. தொற்று நோய்கள், அரசியல் குழப்பம், தொடரும் இயற்கை அனர்த்தங்கள் என கெயிட்டியில் வாழும் மக்கள் மிகப்பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

பூமி அதிர்வின் பேரழிவில் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் இன்றுவரை தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை.


பூமி அதிர்வு ஏற்பட்ட ஒரு மாதத்தின் பின்னர் பரவிய கொலரா நோய்க்கு பல ஆயிரம் மக்கள் பலியாகியதுடன், பல ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டனர். ஐக்கிய நாடுகள் படையினரும் அங்கு நோய்களைப் பரப்பியதாக குற்றச்சாட்டுக்கள் உண்டு.

சிறீலங்காவில் இருந்து சென்ற படையினர் உட்பட பல நாட்டுப் படையினரும் அங்கு பாதிக்கப்பட்ட பெண்களை பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கியிருந்தனர்.

2016ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் அனர்த்தத்தாலும் அங்கு ஏறத்தாழ 1000 மக்கள் கொல்லப்பட்டனர். பில்லியன் டொலர்களை உதவித் தொகையாக அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் திரட்டிய போதும், அங்கு புனரமைப்பு பணிகள் மந்த கதியில்தான் நிகழ்கின்றன.

60 இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர் என உலக வங்கியின் அறிக்கை கூறுகின்றது. 37 இலட்சம் மக்களுக்கு அன்றாட உணவுத் தேவையுள்ளதுடன் பலர் ஊட்டச்சத்து குறைபாட்டுக்கும் உட்பட்டுள்ளனர்.

# ஈரான் – அமெரிக்க மோதல்கள் பாதிப்பு யாருக்கு?



ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்படும் விரிசலால் சீனா அதிகம் பாதிக்கப்படுவதுடன், வடகொரியா சில அனுகூலமான சந்தர்ப்பங்களை பெற்றுவருகின்றது என அனைத்துலக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரான் ஜெனரலின் படுகொலை அதன் பின்னர் ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்கள் என்பன மத்திய கிழக்கின் உறுதித்தன்மையை குலைத்துள்ளது. இது சீனாவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் வளைகுடாவில் இருந்தே அதிகளவு எண்ணையை சீனா இறக்குமதி செய்து வருகின்றது.

சீனாவுக்கு அதிகளவில் எண்ணையை ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஈராக்கும், சவுதி அரேபியாவுமே. நாள்ஒன்றிற்கு 100,000 பரல்கள் எண்ணையை அவை ஏற்றுமதி செய்கின்றன.

ஈரானிடம் இருந்தும் சீனா அதிகளவு எண்ணையை கொள்முதல் செய்கின்றது. ஆனால் அமெரிக்காவின் தடை கடந்த ஆண்டு மீண்டும் நடைமுறைக்கு வந்ததால் இந்த கொள்முதலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் 539,106 தொன் எண்ணையை சீனா கொள்முதல் செய்திருந்தது. ஆனால் அதற்கு முன்னைய வருடம் 3.04 மில்லியன் தொன்களை கொள்முதல் செய்திருந்தது.

ஆனால் ஈரான் மீதான அமெரிக்காவின் நடவடிக்கையை அங்கு ஒரு ஆட்சி மாற்றத்திற்கு அமெரிக்கா முற்படுவதாகவே வடகொரியா பார்க்கின்றது. எனவே அது தனது அணு ஆயுதத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கலாம்.

ஈரான் பிரச்சனையை பயன்படுத்தி சீனாவின் பொருளாதாரத்தை சிதைப்பதே அமெரிக்காவின் திட்டம் என சீனாவின் குளோபல் ரைம்ஸ் நாளேடு தெரிவித்துள்ளது. ஈரான் மற்றும் வளகுடா நாடுகளின் எண்ணை வளத்தில் தான் சீனாவின் அபிவிருத்தி தங்கியுள்ளது. எனவே அமெரிக்காவின் வியூகம் தொடர்பில் எமது கண்ணோட்டம் சரியானது. இது படைத்துறை மோதல்களுக்கு வழிவகுக்கும் என அது மேலும் தெரிவித்துள்ளது.

ஓமான் வளைகுடா பகுதியில் ஈரான் மற்றும் ரஸ்யாவுடன் இணைந்து சீனா கடந்த மாதம் ஒரு கடற்படை ஒத்திகையை நடத்தியிருந்தது.


எனினும் சீனா அமெரிக்காவுடன் நேரிடையாக மோத விரும்பவில்லை. இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வந்த பொருளாதாரப் போர் தற்போதே தணிவு நிலையை அடைந்துள்ளது என சிங்கப்பூரை தளமாகக் கொண்ட ஆசியா பிராந்தியத்திற்கான மூத்த ஆய்வாளர் காகோ யூ தெரிவித்துள்ளார்.

ஈரானில் உள்ள சீனாவின் நிறுவனங்களை முன்நிறுத்தி அமெரிக்க அதிபர் ஒரு பேரம் பேசலை மேற்கொள்ளலாம். கடந்த செப்ரம்பர் மாதம் ஈரானுடன் வர்த்தக உறவுகளை மேற்கொண்ட சில சீன நிறுவனங்களுக்கு வெள்ளை மாளிகை தடை விதித்திருந்தது. குவாய் தொலைத்தொடர்பு நிறுவனமும், தமது பாதுகாப் புக்கு அச்சுறுத்தலானது என அமெரிக்கா தெரிவித்திருந்தது.

ஆனால் ஈரான் ஜெனரல் படுகொலையை அனைத்துலக நாடுகள் அமெரிக்காவின் ஒரு பொறுப்பற்ற தன்மையாகவே பார்க்கின்றன என த எக்கொனமிஸ்ட் புலனாய்வு பிரிவின் அதிகாரி நிக் மறோ தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜெனரலின் படுகொலை அமெரிக்க – வடகொரியாவுக்கு இடையிலான உறவுகளை மேலும் பாதித்துள்ளது. வடகொரியா தன்னை பாதுகாக்கும் நோக்கத்துடன் அணுவாயுதத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தலாம் என தென்கொரியாவைத் தளமாகக் கொண்ட ஆய்வாளர் அந்தோனி றின்னா தெரிவித்துள்ளார்.

# நான்காம் தொழில் புரட்சிக்காக நம்மை தயார் செய்வோம் !




இந்த 2020 புத்தாண்டின் நுழைவாயிலைக் கடக்கும் போது, அறிவியல் புனைகதை திரைப்படங்களில் சித்தரிக்கப்படுவதைப் போலவே எதிர்காலத்தை நோக்கி வேகமாகச் செல்கிறோம் என்றால் அது மிகையாகாது. அன்றாட வாழ்க்கையில் ஒருங்கிணைந்த மேம்பட்ட தொழில் நுட்பத்துடன் பயணிக்கும் உலகில்; கற்பனை தொழில் நுட்பங்கள் பல கண்கூடாக காணும் கருவிகளாக இந்த தசாப்தத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு வந்துள்ளன. இன்று தொலைத் தொடர்பு கருவிகள், கற்றல் உபகரணங்கள், அலுவலக மற்றும் வீட்டு தளபாடங்கள், வாகனங்கள் என்பன முழுமையாக உணர்திறன் கொண்ட கருவிகளை கொண்டு இயக்கப்படுபவையாக விளங்குவதுடன், அவை தரவு சேகரிக்கும் பொறிமுறைகளாகவும் விளங்குகின்றன.

18 ஆம் நூற்றாண்டில் பிரிட்டனில் நீராவி இயந்திரங்களைக் கண்டுபிடிப்பதில் தொடர்ச்சியான தொழில்துறை புரட்சிகளின் குவிப்பு, இன்றைய தொழில்துறை புரட்சி 4.0 (Industrial Revolution 4.0) வரை முன்னேறி “உடலியல், உயிரியல் மற்றும் மருத்துவ விஞ்ஞானம்” ஆகியவற்றில் இயந்திர உபகரணங்களின் துணையுடன் மாபெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

சர்வதேச வர்த்தகம் மற்றும் தொழில்துறை வழிகாட்டிகள், அந்த தேசங்களின் தேசிய கொள்கைகள் என்பன தயாரிப்புகள் எவ்வாறு வடிவமைக்கப்பட, தயாரிக்கப்பட, பயன்படுத்தப்பட மற்றும் இயக்கப்பட வேண்டும் என்பதை வரையறை செய்கின்றன. மேலும் இந்த புதிய தயாரிப்புகளை பராமரித்தல், தொழிற்சாலைகளின் செயற்பாடுகள், செயல் முறைகள், விநியோக சங்கிலி மேலாண்மை மற்றும் செயலாற்றும் திறன் கண்காணிப்பு முறைகள் என்பனவும் வரையறுக்கப்படுகின்றன. இந்த தொழில்நுட்ப புரட்சியில் நாமும் நிலைத்த பொருளாதார பலத்துடன் தொடர்ந்து பயணிக்க வேண்டுமாயின், பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்

**ஒன்பது வலுவான தூண்கள்**

உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான தொழில்கள் நான்காம் தொழில் புரட்சியால் மேம்படக்கூடிய ஒன்பது விடயங்களை பொஸ்டன் ஆலோசனைக் குழுமம் (Boston Consulting Group) கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

***1. பெரிய அளவிலானான தரவுகளின் மேலாண்மை(processing of big data)***

***2. செயற்கை நுண்ணறிவு (Artificial Iintelligence)***

***3. ரோபாட்டிக்ஸ் எனப்படும் இயந்திர மனித வலு பயன்பாடு,***

***4. உருவகப்படுத்துதல் (Designing) முறைமைகள்***

***5. கிளவுட் எனும் விண்வெளி தகவல் சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு தளங்களின் மேம்பாடும் பயன்பாடும்***


***6. உயிரிகள் மற்றும் உபகரணங்கள் இடையேயான வலையமைப்பு (internet of things) இன்டர்நெட்***

***7. சேர்க்கை உற்பத்தி (additive manufacturing),***

***8. பெரிதாக்கப்பட்ட யதார்த்தத்தை ஒருங்கிணைத்தல் (integration of augmented reality)***

***9. துஷ்பிரயோகத்திற்கு எதிராக காவல்துறையினருக்கு இணைய பாதுகாப்பு (cyber security)***

பெரும் மாற்றங்கள் உலகளவில் தொழில்களை மாற்றும் அதே வேளையில், நான்காம் தொழில் புரட்சியானது இதனால் ஏற்படும் மனிதவலு பயன்பாட்டு குறைவை சீர்செய்ய புதிய தொழில்நுட்ப பட்டதாரிகளை தொடர்ந்து பயிற்றுவித்து கொள்ளும் திட்டங்களையும் உள்ளடக்க வேண்டும்.




***மலேசியாவின் முன்னுதாரணம்;***

இந்த புதிய தேவைகட்கு முகம் கொடுக்கும் வகையில், மலேசியாவின் முதன்மையான தனியார் பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஆசிய பசுபிக் தொழில்நுட்ப மற்றும் ஆய்வு பல்கலைக்கழகம் (APU). உலகளவில் வணிகத்திலும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்க பாத்திரங்களுக்கு பட்டதாரிகளை உருவாக்குவதில், தொழில்நுட்பம், புதுமை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் தனித்துவமான பயிற்சிகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.

**விக்கிரமன்**

பல்துறை, நடப்பு மற்றும் எதிர்கால-ஆதாரம் கொண்ட திட்டங்களை மதிப்பாய்வு செய்தல், மேம்படுத்துதல் மற்றும் வழங்குதல் மூலம் APU புதுமை செய்கிறது. மேற்குறிப்பிட்ட ஒன்பது தளங்களில் அதன் கட்டமைப்பை சீரமைப்பதன் மூலம், அதன் மாணவர்களை வரவிருக்கும் புரட்சிக்குத் தயார்படுத்துகிறது, தொழில்நுட்பத்தின் மீது முன்னிலைப்படுத்தும் திட்டங்கள் மூலம்.

இந்த கட்டமைப்பில் IoT, தரவு அறிவியல், இணைய பாதுகாப்பு, கிளவுட் கம்ப்யூட்டிங், AI அல்லது அறிவார்ந்த அமைப்புகள், மெகாட்ரானிக்ஸ், மின் வணிகம், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், நிதி தொழில்நுட்பம் (Fintech) மற்றும் மொபைல் தொழில்நுட்பம் ஆகியவை அடங்கும்.

மேலும் மலேசியாவின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மாற்றுவதற்கான திறமைகளின் தேவையை நிவர்த்தி செய்வதற்காக இந்த முக்கிய பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கைத்தொழில் கொள்கைகள், தொழில்கள் தடையற்ற டிஜிட்டல் உருமாற்ற செயல்முறைகளுக்கு உட்படுத்த சரியான தொழில்நுட்ப உள்கட்டமைப்பை உருவாக்கி செயல்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. ஒரு கல்வி நிறுவனமாக, APU க்குள் கற்பித்தல் மற்றும் கற்றல் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மாணவர்களுக்கு வளர்ச்சிக்கு ஒரு வசதியான சுற்றுச்சூழல் அமைப்பை வழங்குகின்றன, அங்கு அவர்கள் ஒன்பது விடயங்களை பற்றிய வழிமுறைகளையும் பெறுகிறார்கள்.

இப்பல்கலைக்கழகம் பிரான்ஸ், சிங்கப்பூர், ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய இடங்களில் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது, இது மாணவர்களுக்கு அனுபவத்தைப் பெற வழிவகை செய்கிறது. APU இல் இணையத்தள பாதுகாப்பு திறன் வலயம் (Cyber Security talent Zone) அமைக்கப்பட்டுள்ளது, இது மலேசியாவின் முதல் ஒருங்கிணைந்த இணைய பாதுகாப்பு திறமை மண்டலமாகும்.

இது முழு அளவிலான சைபர் அச்சுறுத்தல்கள் உருவகப்படுத்துதல் மற்றும் மறுமொழி மையம் மற்றும் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தில் இராணுவ தர நிகழ்நேர சைபர் பாதுகாப்பு கண்காணிப்பு மென்பொருளைக் கொண்டுள்ளது, அங்கு மாணவர்கள் சமகால விடயங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதுடன் நடைமுறை அனுபவத்தைப் பெறுகிறார்கள்.

APU அதன் விவாத அரங்குகள், சிந்தனைக் குழாம் அறிமுக பயிற்சி நிலையங்கள், மற்றும் புதுமை ஆய்வகங்கள் மூலம் அதன் படைப்பாற்றல் மற்றும் புதுமைகளை வளர்க்கிறது - இது மாணவர்களுக்கு வகுப்பறைக்கு வெளியான பயிற்சி பெறும் சூழலை வழங்குகிறது.

அதன் ஆராய்ச்சி மையங்கள் மாணவர்களுக்கு ரோபாட்டிக்ஸ் பொறியியல், தரவு பகுப்பாய்வு, தடயவியல் மற்றும் இணைய பாதுகாப்பு, வணிக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு, தொழில் முனைவோர் மற்றும் தலைமை ஆகியவற்றில் சிந்தனை பயிற்சிகளையும் வழங்குகின்றன.

மாற்று கலாச்சாரங்கள் இடையேயான தகவல் தொடர்புகளை ஊக்குவிக்கும் போது APU படைப்பாற்றல் மற்றும் புதுமைகளை வளர்க்கிறது, மேலும் மாணவர்களுக்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் மென்மையான திறன்களை அதிக வேலைவாய்ப்புடன் வழங்க வாய்ப்பளிக்கிறது.

இத்தகைய சர்வதேச மட்ட திறன் விருத்தி APU பட்டதாரிகள் கருத்து வேறுபாடுகளுக்கு இசைவாக பணியாற்றும் திறனை வழங்குகிறது, மேலும் அவர்கள் உலகளாவிய உரையாடல்கள், சர்வதேச உத்திகள் மற்றும் பல கலாச்சார சந்திப்புகளில் ஈடுபடுவதற்கு நன்கு பயிற்றப்படுகின்றனர், மொத்தத்தில், அவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாகி, அதிக வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள்.

***நான்காம் தொழிற்புரட்சிக்காக தாயகத்தில் எம் வளங்களை மேம்படுத்துவது எப்படி?***

உரிய பாடசாலை கல்வியின் பின்னர் பட்டப்படிப்புகளுக்கு தேர்வு செய்யப்படாத மாணவர்களுக்கு எதிர்காலத்தை உறுதிப்படுத்தும், மற்றும் அவர்களை தொழில் துறையுடன் இணைந்து பட்டதாரிகளாக மாற்றுவதில் பல்கலைக்கழகங்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இன்றைய சூழலில் பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவன ங்களுடனான

தொடர்ச்சி 13ம் பக்கம்

## தமிழ்க் கட்சிகள் ... தொடர்ச்சி...

இனங்காட்டியது. ரெலோ, புளொட் என்பன தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்ட போதிலும், விக்கியின் கட்சியில் இணைய முன்வரவில்லை. தற்போதைய நிலையில் சுரேஷ், கஜேந்திரகுமார், அனந்தி, ஐங்கரநேசன், ரெலோவிலிருந்து பிரிந்த ஸ்ரீகாந்தா அணி என்பன விக்கி தலைமையிலான கூட்டணியில் இணைவற்கான பேச்சுக்களை - பேரங்களை நடத்திக்கொண்டுள்ளன.

பேச்சுக்களை அவர்கள் நடத்திக் கொண்டிருந்தாலும் அவர்களால் முன்வைக்கப் படும் நிபந்தனைகளும், விக்கி தயாரித்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அவர்கள் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பதிலும்தான் இந்தக் கூட்டணியின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உதாரணமாக சுரேஷ் இந்த கூட்டணிக்குள் வந்தால் தான் வெளியேறிவிடுவேன் என்பது கஜேந்திரகுமாரின் நிபந்தனை. அதேபோல, விக்கி வைத்துள்ள புரிந்துணவர்வு உடன்படிக்கைபயின் பல விட யங்களை ஏற்றுக்கொள்ள முடியாதவராக சுரேஷ் இருக்கின்றார்.

### கட்சிப் பதிவு இல்லை

விக்கி தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி அரசியல் கட்சியாக இதுவரை பதிவு செய்யப்படவில்லை. பொதுத் தேர்தலுக்கு முன்னதாக அதனைப் பதிவு செய்வதற்கான வாய்ப்புக்களும் இல்லை. அதனால், ஈ.பி.ஆர். எல்.எப். பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாக இருப்பதால், அதில் களமிறங்குவதுதான் புதிய கூட்டணியின் திட்டம். அதற்காக கட்சியின் சின்னத்தையும், பெயரையும் மாற்றுவதற்கும் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைத் தயாரித் திருக்கின்றார் விக்னேஸ்வரன்.

அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையும் தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது. முக் கிய தீர்மானங்களை எடுப்பதற்காக இதற்கு 11 உறுப்பினர்களைக் கொண்ட பொலிட்பீரோ ஒன்று அமைக்கப்படும். இதில் ஆறு போர் தமது கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என விக்கினேஸ்வரன் சொல்வதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் சுரேஷ் இல்லை. இதுபோன்ற பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. அதனா ல்தான் பொங்கலுடன் புதிய கூட்டணி குறித்த அறிவிப்பு வெளிவரும் எனச் சொல்லப்பட்ட போதிலும், இன்று வரையில் எந்த நகர்வும் இல்லை.

விக்கி தலைமையில் பலமான மாற்று அணி ஒன்று உருவாகுமா? அவ்வாறு உருவா கினால், கூட்டமைப்புடன் முரண்பட்டு வெளி யேறிய அணிகள் அதற்குள் இணையுமா? போன்ற கேள்விகள் பலமாக எழுகின்றன. இந்த நிலையில், மீண்டும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் கைகளிலேயே தமிழ் மக்களின் தலைவிதி போய்விழுமா என்பது பெரிய கேள்வியாக எழுகின்றது.

## ஈழத்தமிழர் ... தொடர்ச்சி..

இருந்தாலும் ரஷ்சிய வெளிவிவகார அமைச்சரின் கதையாடல் தீவிரவாத சிங்கள

பௌத்த பிக்குகளின் கவனத்தை ஈர்க்கும். இனவழிப்பின் "புனித தலமான" இத்தீவில் ஐ-அமெரிக்க பிரஜையான கோத்தபாயாவின் வருங்கால பங்கு எவ்வாறு இருக்கும் என்பதை கணிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு.

ரஷ்சியாவின் கொடூரமான ஆயுதங்கள் பற்றிய கவலை இப்போது தமிழருக்கு இல்லை யெனினும், நேரடியாக கொலை செய்யாத ஆயுதங்களாக உள்ள கொழும்பு-மைய நோக் கிற்கு வலுவூட்டும் தற்போதைய உலக சக்தி களின் செயற்பாடுகள், தமிழர்கள் இத்தீவில் ஒரு தேசமாக உள்ளதை எதிர்க்கிறது என்பது பற்றிய கவலை தமிழர்களுக்கு உண்டு.

இந்த இனவழிப்பு தீவின் "பிரிக்க முடியாத பாதுகாப்பிற்காகவும்" சர்வதேச நீதி யை வலுவிழக்கச் செய்யவும் ரஷ்சியா என்ன செய்யப்போகிறது என்பதை தமிழர் கவனமாக அவதானிக்க வேண்டும்.

**நன்றி- தமிழ்நெற்**

## மூன்று வல்லரசு ... தொடர்ச்சி..

இதனிடையே, சிறீலங்காவின் பூகோள பிராந்திய முக்கியத்துவத்தினால் தாம் மிகப்பெரும் அரசியல் அழுத்தங்களைச் சந்தித்து வருவதாக கோத்தபாயா சீன அமைச்சரிடம் முறையிட்டுள்ளார்.

சிறீலங்காவின் கேந்திர முக்கியத்துவமே இந்த சந்திப்புக்களின் பின்னனி, உலகின் மிகவும் முக்கிய வழங்கல் பாதையாக கருதப்படும் இந்து சமுத்திரப் பிராந்தியம் சிறீலங்காவில் இருந்து 12 கடல் மைல்கள் தொலைவில் தான் உள்ளது. உலகின் 72 சதவிகித எரிபொருள் விநியோகம் இந்த பாதையால் தான் செல்கின்றது. 50 விகித கொள்கலன்களும் இந்த வழியால் தான் செல்கின்றன. அதுவே தற்போது சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் அழுத்தங்களுக்கு காரணம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## சிங்கள ... தொடர்ச்சி..

பகுதிகளுக்குள் தமிழர்கள் எட்டியும் பார்த்து விடக் கூடாது என்பதற்காகக் காட்டினைச் சுற்றி முட்கம்பிப் பாதுகாப்பும் பலப்படுத்தப் பட்டுள்ளது.

இவற்றிற்கு அப்பால் வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களின் 613 ஏக்கரினைக் கடற் படையினரும் அதன் அருகில் சுமார் 180 ஏக்கர் நிலத்தை வான்படையினரும் அபகரித் ததைப்போல இம் மாவட்டத் தமிழ் மக்களின் பூர்வீக நிலமான கேப்பாபுலவு கிராமத்தில் 700 ஏக்கர் நிலம் இன்றுவரை படையினரின் அபகரிப்பில் உள்ளது. இங்கு வாழ்ந்த 313 குடும்பங்கள் அருகில் இருந்த காட்டுப்பகுதியில் அமைந்துள்ள மாதிரிக் கிராமத்தில் வாழ்கின்றனர்.

இவ்வாறு ஆண்டான்குளத்தில் 39 குடும்பங்களின் 94 ஏக்கரும், திருக்கோணம் பட்டியில் 04 குடும்பங்களின் 26 ஏக்கர் நிலமும், விண்ணகம் வயல்வெளியில் 3 குடும்பங்களின் 18 ஏக்கரும், ஆத்தங்கடவைப் பிரதேசத்தில் 17 குடும்பங்களின் 124 ஏக்கர் நிலமும் படையினரிடம் உள்ளதோடு மருதடிக்குள வயல் வெளியில் 9 குடும்பங்களின் 48 ஏக்கர் நிலமும் , ஆலங்குளத்தில் 14 குடும்பங்களின் 74 ஏக்கர் நில மும் படையினரின் ஆக்கிரமிப்பிலேயே உள்ளது.

இதேபோன்று சாமிப்பில் கண்ட லில் 26 குடும்பங்களின் 143ஏக்கர் நில மும், ஈரக்கொழுந்தன் வெளியில் 8 குடும்பங் களுக்குச் சொந்தமான 71 ஏக்கரும் அபகரிக்கப் பட்டுள்ளதோடு படலைக்கல்லில் 7 குடும்பத்தி ற்கு உரித்தான 48 ஏக்கரும், குந்தைகைக் குளத்தில் 24 குடும்பங்களின் 48 ஏக்கரும், செம்மலை புளியமுனையில் 125 குடும்பங்களின் 276 ஏக்கர் நிலப்பரப்பும் படையினர் வசமேயுள்ளது.

இவற்றினைப் போன்றே நீராவியடியில் 36 குடும்பங்களுக்குச் சொந்தமான 163 ஏக்கரும், உலாத்து வெளியில் 15 ஏக்கருடன், நீராவி வயலில் 20 ஏக்கர் வயல் நிலமும், வட்டுவனில் 10 ஏக்கர் நிலமுமாக மொத்தம் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி, பேச்சுச் சுதந்திரம் நிர்வாகச் சுதந்திரம் என மாயை காட்டும் இந்த சொல்லலங்கார அரசில் நல்லாட்சி என்ற போர்வையில் ஒரு மாவட்டமே விலைபேசி விற்பனை செய்யப்பட்ட வண்ணமுள்ளது. இதற்கும் அப்பால் ஓர் அரசியல்வாதியின் ஆசிர்வாதத்துடன் காட் டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு மரங்கள் தென்னிலங்கைக்குக் கடத்தப்படுவதோடு இன்னொரு பகுதியினரின் ஆசிர்வாதத்துடன் தென்னிலங்கை மீனவர்களினால் இம் மாவட்டத்தின் கடற்கரையின் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்படுகின்றது.

யுத்த காலத்தில் யுத்தம் என்ற கண்ணுக்குத் தெரிந்த ஓர் எதிரியைத் துணிந்து எதிர் கொண்ட இம் மக்களுக்கு இன்று கண்ணுக்குத் தெரியாத சூழ்நிலையில் எதிரிகள் பல வழிகளிலும் அதாவது ஆக்கிரமிப்பு, கொள்ளை, அடாத்தென ஆட்சியாளர்களின் ஆசிர்வாதத்துடன் இடம் பெறும் மறைமுக யுத்தத்தினை எதிர்கொண்டு தமது சீவனோபாயத்தை நடாத்த முடியாமல் தவிர்க்கின்றனர்.

அரசியல்வாதிகளாலும் ஒன்றுமே உருப்படியாகச் சாதிக்க முடியவில்லை. சர்வதேசமோ அல்லது இது தொடர்பில் அக்கறையுள்ள அமைப்புக்களோ எதனையும் சாதிக்கவும் முடியவில்லை. இதனால் இம் மக்கள் முள்ளிவாய்க்காலின் அவலத்தை இன்றும் அனுபவித்த வண்ணமே உள்ளனர்.

இந்தளவு நிலங்களையும் விழுங்கியுள்ள சிங்க ளம் தாம் வடக்கு மாகாணம் முழுவதுமே படை யினரின் நித்திய பாவனைக்கான சிறுபகுதி நிலத்தினை மட்டுமே வைத்துள்ளதாக வழ மையான பொய்யுரைப்பை தொடர்ந்த வண்ண மேயுள்ளனர்.

## நான்காம் தொழில் ... தொடர்ச்சி...

தொழில்-கல்வி கூட்டு பாட விதானங்கள், இணைப்பு கல்விமுறை என்பன மூலம், பல்க லைக்கழகங்களும், தொழில்நுட்ப கல்லூரிகளும் பிரதானமாக சமூக சேவை நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் ஆகியன அதன் புகுமுக பட்டதாரிகளுக்கு நான்காம் தொழில் புரட்சி ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு ஆபத்தையும் அடையாளம் காணவும் குறைக்கவும் பயிற்றுவிக்க முடியும். இதனை செய்வதற்கு, கல்வி மேம்பாடு மற்றும் தொழில் வாய்ப்பு நிறுவனங்களுடன் கூட்டு தொழில் முறை இணக்கப்பாட்டையும் ஒருங்கிணைப்பு ஒப்பந்தங்களையும் உறவு நிலையையும் மேம் படுத்த வேண்டும்.

அத்துடன் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மாணவர் தர மதிப்பீட்டு பொறி முறைகள், கூட்டு சான்றிதழ் வழங்கல் மற்றும் திறந்த வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல் என்பவையும் இன்றியமையாதவை ஆகும்.

அவ்வகையில் புலம்பெயர் தேசங்களில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள், அங்கீ கரிக்கப்பட்ட சர்வதேச தொழில் நுட்ப நிறுவனங்களுடனான இணைப்பை ஏற்படுத்த வும், சிறப்பு பயிற்சிகளுக்ககான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் முன்வர வேண்டும். மேலும் பட்ட மேற்படிப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுத்தல், தொழில் முறை புலமைப் பரிசில்கள் பெற்று கொடுத்தல் மற்றும் உள்ளூர் ஆராய்ச்சி மையங்களை உருவாக்குதல், படிப்பின் பின்னர் வேலை வாய்ப்புக்களை உள்நாட்டில் ஏற்படுத்தி கொடுத்தல் போன்ற விடயங்களிலும் பங்களிக்க வேண்டும்.

இவ்வகையான திட்டமிடல்கள், செயற்பாடுகள் என்பன தன்னிச் சையாக தொழிநுட்ப துறையில் ஆர்வம் காட்டி வரும் இன்றைய இளைய தலைமுறைக்கு வழிகாட்டி நெறிப்படுத்துவதன் மூலம் எதிர் காலத்தின் சமூக பொருளாதார ஒழுங்குகளுடன் எம் சமுதாயம் முன்னோக்கி செல்லும் வழிகளை திறந்து விடும் என்பதில் ஐயமில்லை .